


# தென்னாடு


செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 22ம் நாள் நிறைமதி கூடிய தைப்பூச நாள் (05-02-2023 ஞாயிற்றுக்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## இளவேனில் சித்திரையே தமிழர் வருடப்பிறப்பு




இளவேனில் சித்திரையே பண்டைத்தமிழர் வருடப்பிறப்பு ஆகும். ஆதாரத்துடன் விளக்கும் ஆய்வுக் கட்டுரை உள்ளே.

தொடர்ச்சி பக். 7

# ‘பெருஞ்சிவனிரவு’ இம்முறை மாசித் திங்கள் 6ம் நாள் (பெப்ரவரி 18)

## தேய்பிறை பதின்மும்மைப் பிறைநாளில் (கழுவாய்) நோற்கப்படும்

நகுலமுனியின் பாவம் நீக்கி அருளிய நம் நாதனே
பிதிர்க்கடன் செய்வோர்க்குப் பிறவிப்பிணி நீக்கும் எம்பெருமானே
கண்ணாரமுதக்கடலே கடல்தனில் அமர்ந்த கணநாதனே
தம்மடி சார்ந்தாரை காத்திடும் வலிவடக்கு நகுலனே
ஆடியபாதனே! அம்பலவாணனே! அருள்மலையே!
நகுலேச்சரநாதனே போற்றி போற்றி!



அருள்மிகு நகுலாம்பிகை அம்மை உடனுறை நகுலேச்சரநாதர் திருக்கோயில் - கீரிமலை யாழ்ப்பாணம்

# முழங்காவில் அருள்மிகு 'ஓங்காரநாதர்' திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு

வேழமுகத்தோனாகிய விநாயகப்பெருமான் பெயர் வைத்து, உறைகொண்டு அருளுகின்ற முழங்காவில் மண்ணில், முதலாம் தமிழ்ச் சங்கம் கண்டவரும், மகேந்திர மலையில் ஆகமம் தன்னை தோற்றுவித்து அருளியவருமாகிய எம்பெருமான் சிவபெருமானை **'ஓங்காரநாதராக'** திருநிலைப்படுத்த திருவருள் கூடியது.

அதனடிப்படையில் தைத் திங்கள் 2ம் நாள் (16-01-2023) அன்று இரவு 9 மணியளவில் பெருஞ்சாந்தி வழிபாடுகள் ஆரம்பமாகி, இறைதிருபடிமங்கள் திருநிலைப்படுத்தல் இடம்பெற்றது. தொடர்ந்து அடுத்தநாள், தைத் திங்கள் 3ம் நாள் (17-01-2023) காலை 6மணி தொடக்கம் 9 மணி வரை எண்ணெய்காப்பு இடம்பெற்றது. தொடர்ந்து வேள்விகள் இடம்பெற்று, காலை 11.42 மணி தொடக்கம் 12.40 வரையான நல்வேளையில் திருக்குட மங்கல நன்னீராட்டு இடம்பெற்றது. தொடர்ந்து ஓங்காரநாதர் குடமுழுக்கில் பங்கு கொண்ட அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அமுது செய்விக்கப்பட்டது.



மேலும் இத் திருக்குடமுழுக்கில்தருமையாதீனத்தின் திருக்கேதீச்சரத் தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், ஈழத்து ஓதுவா மூர்த்திகள் நவரட்ணம் ஐயா அவர்கள் மற்றும் திருஎறும்பூர் ஓதுவா மூர்த்திகள் முருகனானந்தம் ஐயா அவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் பெருமளவிலான மாணவர்கள் எண்ணெய்காப்பு சாற்றி, நீர் ஊற்றி வழிபாடு செய்து ஓங்காரநாதர் திருவருளைப் பெற்றிருந்தனர். ஆசிரியர்கள், பெற்றோர்களும் இவ்வழிபாட்டில் இணைந்து பேறுற்றிருந்தனர். மேலும் குடமுழுக்கை தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் மண்டலத் திருமஞ்சனம் இடம்பெற்று, கடந்த தைத் திங்கள் 15ம் நாள் (29-01-2023) ஞாயிற்றுக்கிழமை சங்கு நீராட்டும் சிறப்பாக நடந்தேறியுள்ளது.

இப்பெரும் கைங்கரியத்தை கனடா - சைவநீதி அறக்கட்டளை மற்றும் தென்னாடு சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்தியிருந்தனர். இவ்வாறாக ஆதீனங்கள் மற்றும் பல சமயப் பெரியோர்களின் வருகையினால் பேறுற்றிருந்த இம்மண்ணில் ஓர் சிவ வழிபாட்டுத்தலம் **"ஓங்காரநாதர் திருக்கோயில்"** என்ற திருப்பெயரில் அமையப் பெற்றது, முழங்காவில் அடியார்களின் காவலனாக இருந்து அருள்புரியும் சித்தி விநாயகப் பெருமானின் திருவருளேயாகும்.

**"முழங்காவில் பதிகொண்ட ஓங்காரநாதரே**
**ஓயாமல் உம்புகழும் ஓங்கி ஒலித்திடவே**
**உன்னை அடிபணிந்து தொழுகின்றோம்**
**எம் குறைதீர்ந்திட காத்து அருள்வாயப்பா."**

**திருச்சிற்றம்பலம்**

# SLIIT பல்கலைக்கழகத்தில் தைப்பொங்கல் பெருவிழா



SLIIT (பிரபல தனியார் உயர்கல்வி நிறுவனம்) இல் முதல்முறையாக தமிழர் பண்பாட்டைப் போற்றும் தைப்பொங்கல் பெருவிழா இடம்பெற்றது. கொழும்பு மாநகரில் முற்று முழுதான சிங்கள பிரதேசமான மாலபேயில், தமிழர் பண்பாட்டைப் போற்றும் வகையில் இச்செயற்பாட்டை SLIIT பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

SLIIT பல்கலைகழகத்தின் பிரதான கட்டத்தின் முன்றலில் இப்பொங்கல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இன்றைய நாட்களில் தமிழர் மரபானது மருவி வருகின்ற நிலையில், SLIIT பல்கலைக்கழக மாணவர்களின் இம்முயற்சியானது தமிழ் இளையோர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. மேலும் இவ்விழாவை SLIIT பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றிய மாணவர்களே இணைந்து சிறப்பாக நடத்தியிருந்தனர். இப்பொங்கல் விழாவானது ஓர் அறிமுக விழாவாகவே அரங்கேறியது. அதாவது SLIIT பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தினாலே, **"கலாநேத்ரா"** எனும் தொனிப்பொருளில் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் தமிழ் கலாச்சார பண்பாட்டு விழாவிற்கான ஓர் அறிமுகமாகவே இப்பொங்கல் விழா திட்டமிடப்பட்டு ஒழுங்கைமைக்கப்பட்டது. எனினும் SLIIT பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றிய மாணவர்களின் கூடுதலான ஒத்துழைப்பினால், அனைவரின் கவனத்தையும் ஈர்த்த ஓர் பெருவிழாவாக இப்பொங்கல் விழா நடந்து முடிந்துள்ளது.

இப்பொங்கல் விழாவில் தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றும் முகமாக முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் போன்ற தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களும், ஏனைய கலைநிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது. இப்பொங்கல் விழாவில் சிங்கள சகோதரர்களும் தமிழர் பாரம்பரிய உடையில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**"குடித்த பாலுக்கும் கும்பிட்ட வர்க்கம் வளர்ந்த பண்பாட்டை விட்டுவிடுமா?"** என்று தமிழர் திருநாளை கொண்டாடி மகிழ்ந்த SLIIT பல்கலைக்கழகத்தில், மேலும் சிவனிரவு மற்றும் கலாநேத்ரா போன்ற தமிழ் விழாக்கள் இடம்பெறக் காத்திருக்கின்றமை சிறப்பம்சமாகும்.

**குடித்த பாலுக்கும் கும்பிட்ட வர்க்கம்**
**வளர்ந்த பண்பாட்டை விட்டுவிடுமா?**
**குடிக்கும் குவளைத் தண்ணீருக்கும்**
**நன்றியைப் பாராட்டும் பத்தியிது.**

**நன்றி சொல்ல வாய்நிரைத்து**
**இயற்கையை வணங்கும் நாளிது.**
**நன்றி மறக்கும் மனிதருக்கு**
**நன்றியை நினைவில் மீட்டும் தைப் பொங்கலிது!**

**திருச்சிற்றம்பலம்**



# சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும்

**"சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும்"** என்ற விழாவை அகில இலங்கை சைவப்புலவர்சங்கம்வைர விழாவை முன்னிட்டு நடாத்தியிருந்தது. அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்திய வைரவிழா சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும், கடந்த தைத் திங்கள் 8ம் நாள் (22-01-2023) ஞாயிற்றுக்கிழமை, காலை 8.30மணி தொடக்கம் மாலை 6.00மணி வரை தென்மராட்சி சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறி சற்குணராஜா அவர்கள் கலந்து கொண்டிருந்தார். மேலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சீர்வளர் சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தருமபுர திருச்சி மௌன மட மற்றும் திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள், சிவகுருநாத வேதாந்தபீடம் தவத்திரு. வித்தியாசாகரர் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகித்திருந்தனர்.

இவ்விழாவானது சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை அரங்கு, சைவப்புலவர் சு.செல்லத்துரை அரங்கு என இரு அரங்கங்களாக காலையும் மாலையுமாக இடம்பெற்றிருந்தது. காலை அமர்வானது சாவகச்சேரி வாரிவனேசர் திருக்கோயில் வழிபாட்டைத் தொடர்ந்து சந்தான குரவர்கள் விழா மேடைக்கு எழுந்தருளலுடன் ஆரம்பமாகியது. காலை அமர்வில் விருது வழங்கல் இடம்பெற்றது. சைவாகம பூஷணம் விருதினை சிவத்திரு. கு.ஶ்ரீகாந்தக் குருக்கள், சிவத்திரு. க.குமாரசுவாமிக் குருக்கள், சிவநெறிப் புரவலர் விருதினை வி.தயாரான், சிவநெறிப்பிரகாசர் விருதினை சமஜஜோதி க.நிஜலிங்கம், பௌராணிக ஞானச்செம்மல் விருதினை சா.உருத்திரபசுபதி, சைவசித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மேலும் **"சைவப்புலவர் பட்டமளிப்பும்"** இடம்பெற்றது. இதில் 2021ம் ஆண்டு தேர்வில் சித்தி பெற்ற 5 சைவப்புலவர்கள், 14 இளஞ்சைவப் புலவர்கள் மற்றும் 2022ம் ஆண்டு தேர்வில் சித்தி பெற்ற 10 சைவப்புலவர்கள், 14 இளஞ்சைவப்புலவர்கள் ஆகியோர் பட்டம் பெற்றனர். அதனைத் தொடர்ந்து **"வைரவிழாச் சைவநாதம் மலர் வெளியீடு"** இடம்பெற்றது. முதற்பிரதியினை கலாநிதி வைத்தியலிங்கம் சிவராசா (பிரபலதொழிலதிபர் சிவா ரேடிங்கோ கொழும்பு, யாழ்ப்பாணம்) அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மாலை அமர்வு சைவப்புலவர் சு.செல்லத்துரை அரங்காக சைவப்புலவர் சிவானந்த சோதி ஞானசூரியம் (உபதலைவர் அகில இலங்கைசைவப்புலவர் சங்கம்) தலைமையில் இடம்பெற்றது. முதன்மைவிருந்ளறதினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் சிறப்பு விருந்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிந்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி. விக்னேஸ்வரி பவனேசன் ஆகியோர். கலந்துகொண்டார்கள். கலை நிகழ்வுகளாக வைரவிழாச் சைவசமயப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களது கலை நிகழ்வுகளான புராண படனம் பண்ணிசை, கதாப் பிரசங்கம், மிருதங்கம், வில்லுப்பாட்டு நாடகம் இடம்பெற்றது. வைரவிழா சைவசமயத் திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

**திருச்சிற்றம்பலம்**

# டென்மார்க்கில் தெய்வத்தமிழ்த் திருக்குடமுழுக்குப் பெருவிழா

டென்மார்க் அருள்மிகு வள்ளிக்குறத்தி தெய்வானை உடனுறை வேல்முருகன் திருக்கோயில் திருக்குடமுழுக்கானது தெய்வத்தமிழ் திருமுறைகள் ஓதி, செந்தமிழ் வேள்விகள் வளர்த்து, ஈழத்தை புலமாகக் கொண்டு புலம்பெயர்ந்து வாழும் சைவத்தமிழ் அடியார்கள் பலரும் புடைசூழ திருவருளோடு இடம்பெற்றது. வாழும் நாடுகளில் நாளும் பண்பாட்டு வாழ்வியலையும் தாய்மொழியையும் அளிக்கும் பெரும் நிறுவனங்களாகவே திருக்கோயில்கள் அமைகின்றது. அந்தவகையில் கருவறையில் தமிழ் ஒலிக்க முருகப்பெருமான் திருச்செவிகள் தமிழ் கேட்டுக் குளிர்வதாக நன்னீராட்டுப் பெருவிழா அமைந்துள்ளது.

நற்செய்கை ஆண்டு (சுபகிருது வருடம்) சுறவம் நல்லோரை தைத் திங்கள் 8ம் நாள் (22-01-2023) ஞாயிற்றுக்கிழமை முக்கோல் (திருவோணம்) விண்மீனும் திருநல் ஓகம் (சித்தயோகமும்) குருவோரையும் பொருந்திவரும் காலை 09.00 மணிமுதல் திருக்குடமுழுக்கு வழிபாடுகள் ஆரம்பமாகின. இந்த தெய்வத்தமிழ்த் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா திருச்சடங்குகள், சுவிற்சர்லாந்து பேர்ன் மற்றும் மர்த்தினி சைவ நெறிக்கூடம் - ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் பூசகர்கள், இங்கிலாந்து கைவீக்கம் உச்சி முருகன் திருக்கோயில் பூசகர்கள், மற்றும்



சைவநெறிக்கூடம் அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் மதியுரைஞர் திருநிறை. சிவயோகநாதன் ஐயா முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்குடமுழுக்கு முன் வழிபாடுகளாக, வேழமுகத்துத் திருக்களிடம் திருமுழுக்கு சிறப்புற நடைபெறத் திருவருள் திருவாணை பெறுதல், குருவாணை பெறுதல் வழிபாடுகள் சனிக்கிழமை (21. 01. 2023) மாலை 3 மணிமுதல் நடைபெற்றுள்ளது. மேலும் அன்றையதினம் நந்திக்கொடி நாட்டல் விழா, கணநாதன் வேள்வி, நெற்கதிர்மணி உறைதல், நிலமகன் (வாஸ்து) வேள்வி என்பனவும் வேழமுகத்து நாதனுக்கு ஐம்பெரும் திருமுகவழிபாடும் நடைபெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஊர்ச்சாந்தி, உள்நுழை திருப்பலி, ஒன்பான் கோள்கள் திருவேள்வி, நிலமகள் சாந்தி, பெருங்காளிப் பெருஞ்சாந்திவேள்வி, திருநீர் உறைதல், திருப்புனல் நிறுத்தல், ஞாயிறு ஒன்றுதல், திங்கள் ஒன்றுதல், தீக்கடவுள் ஒன்றுதல், பன்வழி அருட்காட்சி காட்டல் என்பனவும் தமிழில் நடைபெற்றது. திருவுலாப்போதல், நின்றவண்ணம் துதி, சென்றவண்ணம் துதி, தமிழ்மாண்புத்துதி, திருமுறைத்துதி, தமிழ்ச் சாத்திரத் துதி, குருநெறித்துதி, நால்வர் துதி, சிவனடியார் சேக்கிழார் துதி, திருவுலாத்துதி நடைபெற்று அமளி ஏறல், ஆணைபெறல், குருவாணை பெறல், கணநாதன் ஆணைபெறல், மெய்யொன்றல், திண்பூணல் என்பனவும் தொடர்ந்து சிறப்பாக ஆற்றப்பட்டு திருக்குடமுழுக்கானது முழுமையாக நிறைவடைந்துள்ளது.

பல்லாண்டு உழைப்பில் உருவான அருள்மிகு வேல்முருகன் திருக்கோயிலில், தமது பொதுக்கூட்டத்தில் பொது ஆணை பெற்று, நிர்வாகத்தினர் தமிழ் வழிபாட்டினை நடைமுறைப் படுத்தி உள்ளமை போற்றுதலுக்குரியதாகும். இளம் தமிழ் பூசகர்களை இணைத்துக்கொண்டு சைவநெறிக்கூடம் முன்னெடுக்கும் இவ்வாறான தமிழ் வழிபாட்டுப் பணியானது சைவத்தமிழ் அடியார்களிற்கு கிடைத்த பெரும் பேறாகும்.

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# சித்தாந்தம் கற்போம்

நவீன உலகம் சட்டக் கட்டமைப்புக்களால் இயங்குகின்றது. நிர்வாகமும், ஆட்சி முறைமையும் நிலைபெற்று இருப்பதற்கும், சுயமனித ஒழுக்கமும், மனித உரிமைகளும் பேணப்படுவதற்கு இச் சட்டக் கட்டமைப்பே துணை செய்கின்றது எனலாம். இத்தகு ஆதாரமாக விளங்கும் இச்சட்டத்தின் தோற்றுவாய், சமூக மரபுகளில் இருந்தும், சமய ஒழுக்க நெறிகள் நடைமுறைகளில் இருந்தும் தோற்றம் பெற்றது. காலத்துக்கு ஏற்றது போல், வடிவங்களாலும், நடைமுறைகளாலும் சில மாற்றங்கள் பெற்று இன்றைய நவீன சட்டம் உருவாகியது என்று சட்ட ஆய்வாளர்கள் கருத்துரைப்பார்கள். எனவே இன்றைய சமூகத்தின் ஒழுக்கவியல் சமயத்திற்கு பெரும் பங்குண்டு என்பதை நாம் அறியலாம். கீழைத்தேய மெய்யியல்களில் தலையானதாக விளங்கும் சைவசித்தாந்தமும் ஒழுக்கவியலை தனது சித்தாந்தக் கூறாகக் கொண்டுள்ளது.

சமயத்தில் முதல் படிநிலையில் இருப்பது “அறிவு”. அந்த அறிவினால் பேரறிவாகிய ஞானம் பிறப்பிக்கப்பட வேண்டும். அந்த ஞானமே, பேரானந்த நிலையாகிய விடுதலையை ஆன்மாவுக்கு வழங்கும். அறிவு கூடினால் அது பேரறிவாகி விடாது. அறிவில் உயர்ந்தோர் பலர், சுயநலவாதியாகவும், பேராசைக்காரர்களாகவும், சமூகத்துக்கு தீங்கான விடயங்களைத் தம் அறிவினால் உண்டாக்கி பங்கம் விளைவிப்பவராகவும் இருந்ததை, இருப்பதை நாம் காண்கின்றோம். எனவே. அறிவு தனித்து ஆன்ம விடுதலையை தராது. அவ்வறிவானது, ஒழுக்கத்தோடு கூடி, அன்பு நிலைப்பட்டு, அருள் நிலைக்கு உயர்ந்து மெஞ்ஞானம் தரும். சைவசித்தாந்தம் மிகத் தெளிவாக இப்படிமுறை ஒழுங்கை வலியுறுத்துகின்றது. சித்தாந்த வாழ்வியல் முழுவதுமே ஒழுக்கவியலின் வாயிலாக கட்டியமைக்கப்பட்டது எனில் அது மிகையல்ல. சைவசித்தாந்தத்தின் நோக்கமும் இலக்கும் ஆன்மாக்களாகிய மனிதர்களுக்கு உலக துன்பங்களில் இருந்து மிட்சியும், மீண்டும் பிறவிக்கு உட்படாத பேரானந்த நிலையாகிய முத்தியும் கொடுப்பதாகும். சைவ சித்தாந்தத்தை தலைமேல் போற்றிய இறை அடியவர்களது ஆன்மா விடுதலை பெறுவதாகவே இருந்தது. இத்தகு பெறுதற்கரிய பேற்றினை ஒரு ஆன்மா நுகர வேண்டுமானால் அவ்வான்மா தான் கூடியிருக்கும் உடலைக் கருவியாக் கொண்டு எத்தகு ஒழுக்கவியல் நடத்தைகளைப் பின்பற்ற வேண்டும் என சைவசித்தாந்தமானது, மிகத் தெளிவாக அடையாளப்படுத்து கின்றது.

அறிவு வழி நின்று ஞான நிலையில் தன்னை ஒரு மிகச்சிறந்த தத்துவமாக அடையாளப்படுத்திக் கொள்ளவும் சைவசித்தாந்தம், ஒழுக்க நெறிகளை போதிப்பதன் வாயிலாகவும், தன்னை ஒரு, சமயமாகவும், வாழ்வியலாகவும் தகவமைத்துக் கொண்டு மேலும் சிறப்பு பெறுகின்றது. வேதங்களை ஏற்று பொது நூலாகவும், ஆகமங்களை சிறப்பு நூலாகவும் கொண்ட சைவசித்தாந்தம், ஆகமங்களில் நாற்பாதங்களாக விபரிக்கப்படும். சரியை, கிரியை, யோகம், ஞானம் வாயிலாக ஒழுக்கவியலின் மேன் மையை வாழ்வியல் செலுத்துகின்றது. இந் நான்கு ஒழுக்க நெறிகளையும், மறை களாகவும், அறங்களாகவும் ஏற்றி சொல்வோரும் உண்டு. இதனாலே தான் கச்சியப்பர் சுவாமிகள்,

**‘நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்’ என்று பாடியருளினார்.**

ஒழுக்கம் என்பது, ஒழுகுதல், ஒழுகலாறு எனப்பொருள்படும். அதாவது குறித்த ஒரு நோக்கத்தோடு, குறித்த ஒரு பொருள் மீது எம்மைச் செலுத்துதல் என நாம் பொருள் கொள்ளலாம். நீரை வரம்பு கட்டி நமக்கு வேண்டிய இடத்துக்கு விரயமாகாமல் எடுத்து வருவதைப் போல், மனம், வாக்கு, காயம் என்பவற்றை, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் ஒழுக்க வரம்புகள் ஊடாக இறைவனை நோக்கி நகர்த்தி முத்திக்கு வழிகாட்டும் சைவசித்தாந்தம். சமய நாயன்மார்களான, சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போரும், இவ் ஒழுக்க நெறிகளை முறையே கைக்கொண்டு வீடுபேறு பெற்றனர் என்பது நாம் அறிந்த ஒன்று.

எனவே எமது இன்றைய தேவைப்பாடான சமூக ஒழுக்கத்தையும் அறத்தையும் கட்டியெழுப்புவதற்கு இளையவர்களிடையே நவீன கல்வியோடு சைவ சித்தாந்தக் கல்வியும் அவசியம் என்பதை உணர்ந்து. ஏதோ ஓர் விதத்தில் சித்தாந்தக் கல்வியை பாடசாலைகளின் வெளியேயும் இளையோருக்கு கற்றுத்தர முயல்வோமாக!

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# எமக்கென்று ஒரு புதையல்

பத்தி இலக்கியங்கள் எனும் பெருமையை உடைய செஞ்சமயமாய் ஒளி வீசுகின்ற சமயம் எங்கள் சைவசமயம். எந்த ஒரு சமயத்திற்கும் இல்லாத தனிப்பெருமை எம் சமயத்திற்கு உண்டெனில், அது எம் சமய நூல்களை தொகுக்க வேண்டுமென்று எண்ணப்பாடும், சைவ சமயத்திற்கென்று தனிப்பெரும் நூலகம் கட்டியெழுப்ப வேண்டுமென்ற ஒப்பற்ற எண்ணப்பாடும் பலர் மத்தியில் தோன்றியுள்ளமை இறைவனின் திருவருளே. இந்தப் பெரும் பணிமாத்திரம் நிறைவேறுமானால் சைவசமயம் பேரொளி பெற்று இலங்கும். சமயம் சார்ந்த இலக்கியங்கள், சைவம் தொடர்பான பிற ஆக்கங்கள், சமயம் சார்ந்து இலக்கியங்கள், சைவம் தொடர்பான பிற ஆக்கங்கள், சமயம் சார்ந்து வெளியிடப்பட்ட, வெளியிடப்படும் சஞ்சிகைத் தொகுப்புக்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் என அனைத்தையும் தாங்கியதாய் அந் நூலகம் அமைதல் சாலச்சிறந்தது.

வெறுமான சைவநூல்கள் மாத்திரமல்லாது பிறசமயங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு அச் சமயங்களின் அடிப்படை நூல்களையும் அந் நூலகம் கொண்டிருக்குமானால் அது சைவர்களின் புதையலாகவே அமையும், இன்றைய இளம் தலைமுறையினர் பலர் இந்தப் புனித செயற்பாட்டில் தம்மை ஈடுபடுத்த ஆர்வலராய் இருப்பதை காணும் பொழுது உள்ளம் மகிழ்ந்து கனிகிறது. அத்திறம் நிற்க. ஈழத்துச் சைவ பத்தி இலக்கியங்களும் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டவை. தமிழ் நாட்டு பத்தியிலக்கிய ஆராய்ச்சியும், தேடலும் மிகக் குறைவாகவே நடைபெறுகிறது ஈழத்துச் சைவ இலக்கியங்களை மீட்டெடுக்க வேண்டிய கடமை அனைத்துச் சைவருக்கும் உரியது.

ஈழத்துச் சைவ பத்தி இலக்கியங்களை ஆராய்ந்து அவற்றை திருமுறை போலவோ, கணக்கு நூல்கள் போலவோ தொகுத்து உரைசெய்ய வேண்டியது காலத்தின் தேவை, நாம் செய்த தீவினையோ என்னவோ ஈழத்தின் பெரும்பாலான இலக்கியங்கள் நூலக அழிப்பிலும், உள்நாட்டுப் போரிலும் அழிந்தொழிந்துவிட்டன. அவ்வாறு அவை அழிந்தொழிந்து போனமையால் தமிழ்நாட்டைப் போன்ற இலக்கிய வரலாற்றினை எம்மால் கட்டியெழுப்ப முடியாமற் போய்விட்டது. கடந்து போக எஞ்சியவற்றையாவது முடிந்தளவு மீட்டுக்காப்போம். யோகர் சுவாமிகள் முதலிய சித்தர்கள் பாடிய பாடற்றிட்டுக்களையும், சின்னத்தம்பிப் புலவர் போன்ற புலவர்கள் பாடிச் செய்த அந்தாதி, தூது போன்ற சிற்றியலக்கியங்களையும், தக்கண கைலாச புராணம், திருக்கோணேச்சல புராணம், நகுலாச புராணம், நகுலகிரிப்புராணம், கதிர்காமப்புராணம், திருக்கேதீச்சர புராணம், பிரவைப்புராணம், கேதீச்சர மான்மியம் போன்ற புராண நூல்களையும், ஈழத்துக் கோயில்கள் மீது பாடப்பட்ட திருவூஞ்சல், அம்மானை முதலிய நூல்களையும் தொகுக்க வேண்டியது ஈழத்து சைவர்களின் கடன்.

இது தவிர நாவலர் முதலிய பல நூற்றுக்கணக்கானோர் எழுதியுள்ள உரை நடை இலக்கியங்களையும் தேடிச்சேர்க்க வேண்டும். இந்த நூல்களை மையம் வைத்து ஒரு நூலகம் ஈழத்தில் அமையுமானால் அது மிகச் சிறப்பு. “மழை தமிழ் நிகர்த்து” என்ற மாவைப் புராண வரிகளுக்கமைய மழையைப் போல பொலிந்து பொழிந்த ஒவ்வோர் ஈழச்சைவ பத்தி இலக்கியங்களையும் மீட்டெடுத்தல் வேண்டும். நா.கதிரவேற்பிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றோரது அருந்தமிழ் நூல்களும் போற்றிப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

செயற்கரிய இச்செயலைச் செய்ய கொள்கை பேதமின்றி அனைத்துச் சைவ அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து உழைத்ததால் ஒழிய வேறு எதனாலும் முடியாது. எமக்கென்று ஒரு புதையல். சைவர்கள் விரைந்து வாருங்கள் பூதத்தை விரட்டிப் புதையலை மீட்போம்.

**“பாற்கடலிரியினிற் பருமனிப்படும்**
**மாற்கடலமழியில் மருவல் மானுமோ**
**நாற்கடல் நடுவில் யாழ்ப்பாண நாடுறீஇக்**
**கார்க்கடற் கருணை மண் வைகுங் காட்சியே”**

**திருச்சிற்றம்பலம்**

# பழனிமலை தண்டாயுதபாணி சுவாமிக்கு திருமுறை மந்திரங்களுடன் குடமுழுக்கு

**பொன்னே வருக பொன்னரைஞாண் பூட்ட வருக சிறுசதங்கை
புனைய வருக மணிப்பதக்கம் பூண வருக தவழ்ந்தோடி
முன்னே வருக செவிலியர்கண் முகத்தோ டணைத்துச் சீராட்டி
முத்த மிடற்கு வருகஎதிர் மொழிகள் மழலை சொலவருக
தன்னே ரில்லா நுதல்திலகம் தரிக்க வருக விழியினில்மை
சாத்த வருக மேலாகத் தானே வருக தேவர்தொழு
மன்னே வருக மாமாலின் மருகா வருக வருகவே
வளஞ்சேர் பழனிச் சிவகிரிவாழ் வடிவேல் முருகா வருகவே!**

தமிழ் ஞானப்பழமாகிய முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாகத் திகழும் பழனியில், முருகவேள் பெருமான் **'பழனியாண்டவர்'** எனும் திருப்பெயர் கொண்டு **"ஞானதண்டாயுதபாணியாக'** அடியார்களுக்கு அருள் வழங்குகின்றார். **"காசியின் மீறிய பழனி"** என்றும் **"அதிசயம் அனேகமுற்ற பழனிமலை"** என்றும் அருணகிரிநாதர் பழனித் திருத்தலத்தைப் போற்றுகின்றார்.



தமிழகத்தின் முதன்மைக் கோயிலான பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலானது, திருப்பணிகள் செய்யப்பட்டு 16 ஆண்டுகளுக்குப் பிறகு திருக்குடமுழுக்கு செய்ய திருவருள் கூடியது. அடியார்கள் மற்றும் அறக்கொடையாளர்கள் நன்கொடை மூலம் மூலவர் தங்க விமானம், இராசகோபுரம், வடக்கு, தெற்கு கோபுரங்கள், விமானங்கள், மலைக்கோயில் உள்திருச்சுற்று, வெளித் திருச்சுற்றில் உள்ள மண்டபங்கள் திருமதில்கள், உள்மண்டபங்கள், பெரு மண்டபம், யானைப் பாதை மற்றும் படிவழிப்பாதை மண்டபங்கள் கோயில்கள் ஆகியன புதுப்பிக்கப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டது.

பத்தர்களுக்கு வரம் தரும் வள்ளலாய், கண்கண்ட தெய்வமாய் மெய்ஞானப் பெருஞ்சோதியாய் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள **'பழனி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில்'** திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, நிகழும் திருவள்ளுவ ராண்டு 2054 தமிழ் நற்செய்கை வருடம் தைத் திங்கள் 13ஆம் நாள் (27-01-2023) வெள்ளிக்கிழமை அறுமை பிறைநன்னாளில் தோணி (ரேவதி) நாண்மீனும் கூடிய காலை 8.00 மணி முதல் 9.30 மணிக்குள்ளான நல்வேளையில் திருவருள் துணையுடன் சிறப்பாக நடந்தேறியது.

குடமுழுக்குக்கான யாகசாலை பூசைகள் 21ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து வியாழக் கிழமை 6, 7ம் காலப் பூசைகள் இடம்பெற்றது. ஆறாம் கால பூசை நிறைவில் படிப் பாதையில் இடும்பன், கடம்பன் கோயில்கள், அடிவாரம் பாதவிநாயகர் கோயில், கிரிவீதியில் உள்ள 5 மயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்காக திருக்குடங்கள் ஊர்வலமாக படிவழிப் பாதையில் கொண்டு வரப்பட்டன.

மேள தாளங்கள் முழங்க பரிவாரத் தெய்வத் திருக்குடங்கள் திருவுலா எழுந்தருளச் செய்யப்பட்டு, அந்தந்தக் கோயில்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. பாதவிநாயகர் கோயிலில் காலை முதல் குடமுழுக்கு நடைபெற்றது. சிவாச்சாரியர்கள் தமிழில் வேதமந்திரம் முழங்க, ஓதுவார்கள் திருமுறை பாட திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது. பின்னர், படிப் பாதையில் உள்ள இரட்டை பிள்ளையார், நின்ற பிள்ளையார், வள்ளியம்மை, இடும்பன், கடம்பன், கிரிவீதியில் உள்ள 5 மயில்களுக்கும், சந்நிதிகளுக்கும் 50-க்கும் மேற்பட்ட குடங்களில் தீர்த்தங்கள் கொண்டு வரப்பட்டு, திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

பழனி திருக்குடமுழுக்கானது பல சிவாச்சாரியர்கள், ஓதுவார்கள் தமிழில் திருமுறைகள், திருப்புகழ், கந்தன் அலங்காரம் என வேதமந்திரங்களை முழங்க சிறப்பாக இடம்பெற்றது. முன்னதாகவே கங்கை, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட புண்ணிய தீர்த்தங்களை சிவாச்சாரியார்கள் இராச கோபுரம், தங்க கோபுரம் மற்றும் சுற்றுத் தெய்வங்கள் மீது தெளித்து வழிபட்டனர்.

குடமுழுக்கு விழாவையொட்டி உலங்குவானூர்தி மூலம் மலர்கள் தூவப்பட்ட்டது. மலையடிவாரத்தில் அடியார் பெருமக்கள் குடமுழுக்கை கண்டு பேறுரும் வகையில் மின்னியல் திரைகள் (LED Screen) மூலம் நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் குடமுழுக்கை முன்னிட்டு திண்டுகல் மாவட்டத்திற்கு விடுமுறை விடப்பட்டிருந்தது.

**"சேருமழ கார் பழநி வாழ் குமரனே பிரம
தேவர் வரதா முருக தம்பிரானே."**

**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு - சிவத்திரு. தென்னாடு நிலவன்**





நிகழ்ச்சி நிரல் :

**தைத்திங்கள் 24-ம் நாள் 07.02.2023 செவ்வாய்கிழமை**

| நேரம் | நிகழ்வு முறை விபரம் |
|---|---|
| மாலை 4.00 மணி | திருவிளக்கு வழிபாடு, புனித நீர் வழிபாடு, ஆனைந்து வழிபாடு, பிள்ளையார் வழிபாடு, அனுமதி பெறுதல், திருமகள் வழிபாடு, நிலத்தேவர் வழிபாடு, மண்ணெடுத்தல், முளையிடுதல், காப்பணிதல், வழிபாடுகள். |
| இரவு 7.00 மணி | மூலத் திருமேனிகள் திருக்குடங்களை இடமாகக் கொண்டு வேள்விச்சாலைக்கு எழுந்தருளல் |
| இரவு 7.45 மணி | முன்னவன் பணிகொண்ட நாயனார் அமர்நீதியார்க்கு முந்து தமிழால் முதல் கால வேள்வி |
| இரவு 8.00 மணி | விமானக் கலசம் நிறுவுதல், எண்வகை மருந்து சாத்துதல் |
| இரவு 8.45 மணி | வேள்வி நிறைவு, பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம் |
| இரவு 8.50 மணி | அருளார் அமுதம் (பிரசாதம்) வழங்குதல் |

**தைத்திங்கள் 25-ம் நாள் 08.02.2023 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்வு முறை விபரம் |
|---|---|
| காலை 6.30 மணி | திருப்பள்ளியெழுச்சி, மூல மூர்த்திகளுக்கு ஆனைந்தாட்டல், காப்பணிவித்தல் |
| காலை 7.00 மணி | இறைவன் திருவடியே தொழுதநிலை நாயனார் அமர்நீதியார்க்கு இன்பத்தமிழால் இரண்டாம் கால வேள்வி |
| காலை 8.00 மணி | கலைகள் நாடியின் வழியாக மூலத்திருமேனியை அடைதல் |
| காலை 8.30 மணி | வேள்வி நிறைவு, பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம் |
| காலை 9.00 மணி | திருக்குடங்கள் புறப்படுதல் |
| காலை 9.30 மணி | விமானங்களுக்கு திருக்குட நன்னீராட்டு |
| காலை 9.45 மணி | மூலமூர்த்திகளுக்குத் திருக்குட நன்னீராட்டு |
| காலை 10.00 மணி | அருளாளர்கள் அருளுரை |
| காலை 10.30 மணி | பதின் மங்கலக்காட்சி |
| காலை 11.00 மணி | பெருந்திருமஞ்சனம் |
| காலை 12.00 மணி | பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம் மற்றும் அன்னதானம் |


வேள்விப் பணி

மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளை, பேரூர், கோவை 9865045741 : சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை, திருநணா, பவானி 9942903358

திருச்சிற்றம்பலம்

சிந்து ஆப்செட் & கிராபிக்ஸ், விழுப்புரம். 8056892921

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே** - திருமந்திரம்

### தீக்கை என்றால் என்ன?

தமிழில் தீ + கை என்பதுவே தீக்கையாகும். தீ - தீய்த்தல் என்றும், கை - செலுத்தல் என்று விளக்கமுறும். மலத்தினைத் தீய்த்து சிவமுத்தியில் செலுத்துவது தீக்கை என்றாகும் . வடமொழியில் கொடுத்துக் கெடுப்பது என்னும் பொருளில் தீட்சை என்பர். ஞானத்தினைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்று வடமொழியில் பொருள் கூறப்படும். மலம் அகற்றுதலில் ஞானத்தின் பிறப்பு உள்ளடங்குவதால் மலத்தினை அகற்றி சிவமுத்தியில் செலுத்துவது என்னும் தமிழ் விளக்கம் மிகப் பொருத்தமாக விளங்குகின்றது. பூசை - பூஜை ஆனது போல், தீக்கை - தீட்ஷை ஆனது.

### தீக்கையின் வகைகள் யாவை?

அனைத்து வகையான தீக்கைகளும் முதனிலைத் தீக்கை, வழிநிலைத் தீக்கை என்று இருவகைப்படும். சிவபெருமானே நேரடியாகக் குருவாக வந்து அருளும் தீக்கை முதனிலைத் தீக்கை எனப்படும். மாணிக்க வாசகப்பெருமானுக்கு சிவபெருமான் அருளியது முதனிலைத் தீக்கையாகும். மலங்களுடன் கூடியவர்களுக்கு சிவபெருமான் ஞானாசாரியர்கள் ஊடாக அவர்கள் உயிரில் விளங்கி நின்று தீக்கை அளிப்பது வழிநிலைத் தீக்கை எனப்படும். (வழிநிலை என்றால் ஞானாசிரியரின் வழி நின்று)

பார்த்தல் (நயனம்), தொடுதல் (பரிசம்), திருவார்த்தை (வாசகம்), நினைத்தல் (மானசம்), சாத்திரம், யோகம், ஔத்திரி என்று தீக்கைகள் வகைப்படுத்தி அறியப்படும். இதில் ஔத்திரி தீக்கையே நுழைவு என்றும் (சமயதீக்கை), நோன்மை (விசேட தீக்கை), நுண்மை (நிர்வாண தீக்கை), ஆசிரியத் திருமுழுக்கு (ஆசாரிய அபிடேகம்) என்று தீக்கையில் சில படிநிலைகள் உள்ளன.

### தீக்கை எல்லோரும் கட்டாயம் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா?

சைவசமயத்தார் யாவரும் கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டிய தீக்கை சமய அதாவது நுழைவு தீக்கையாகும். ஆண் பெண் பேதம் இன்றி தீக்கை அனைவரும் பெற்றுக்கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

சிவதீக்கை என்னும் சொற்பதம் தற்காலத்தில் சைவசமய / நுழைவு தீக்கையினைக் குறிக்குமாறு புழக்கத்தில் சிலர் பயன்படுத்தினும், சிவதீக்கை என்பது நோன்மை (விசேட) தீக்கையினையே சிறப்பாகக் குறிக்கும். சிவதீக்கை பெற்று சிவபூசை செய்துவருதல் இல்வாழ்வினை மேலும் சிறப்புறச் செய்யும்.

### தீக்கை பெறுவதனால் ஏற்படும் சிறப்புகள் சில கூறுக?

சாதி, குலம், வகுப்பு மற்றும் பிறப்பு எனும் உயர்வு தாழ்வு நீங்கிய மேன்மக்களே சைவர்கள் ஆவர். சிவதீக்கை இல்லாது செய்யும் சிவபூசையிலும் சிவதீக்கையோடு செய்யும் சிவபூசைக்கே வலிமை உண்டு. கண்ணன், உபமன்யு முனிவரிடம் சென்று சிவதீக்கை பெற்று சிவபூசை செய்தான் என மகாபாரதம் கூறுகிறது. திருநீறு, உருத்திராக்கம் போன்று, தீக்கையும் சிவசம்பந்தஞ் செய்வதற்கு உதவும் கருவியாகும்.

தீக்கை என்பது ஒருவரின் சமயப் பண்பாட்டு அடையாள ஆரம்பப்புள்ளியாகவும், உயிர் ஈடேற்றத்தின் தொடக்க நிலையாகவும், வாழ்வியல் நெறியின் படிநிலையாகவும் இருக்கும்.

### சமய தீக்கை பெறாதவர் செய்யத்தகாதவை சில கூறுக?

சமயதீக்கை இல்லாதவர் - அந்தணரேயாயினும் - அவர்கள் திருநீறு வழங்குதல் தகாது. சமயதீக்கையில்லாது திருக்கோயில் நிர்வாகத்தினைச் செய்வதும், சைவாலயப்பூசைகள் செய்வதும், உபயதாரர்களாகக் கலந்துகொள்வதும், மங்கல இசைவாத்தியப் பணிகளினை திருக்கோயிலினுள் ஆற்றுவதும் உகந்ததல்ல. சமயதீக்கையில்லாதவர் எந்த மேன்மையுடையவராயினும் சைவாலயக் கிரியைகளில் கலந்து கொள்ளும் உரிமை சிவாகமப்படி இல்லையாகும்.

### நடராசப்பெருமான் வடிவத்தினை வீட்டில் வைத்து வழிபடக்கூடாதென்று கூறுகின்றார்களே இது சரியா?

நடராசப்பெருமானை வீட்டில் வைத்து வணக்கக் கூடாது என எங்கும் சொல்லப்படவில்லை. இது திட்டமிட்டுப் புகுத்தப்பட்ட ஒரு மூட நம்பிக்கை மற்றும் சைவ அழிப்பு நடவடிக்கை.

திருவுருவப்படங்கள் ஓவியங்களாக அனைத்து மக்களின் வீடுகளுக்கும் எட்டியது மேற்குலக ஆட்சிக்குப் பிறகேயாகும். செல்வந்தர்கள் ஓவியர்களினை அழைத்து தமது வீடுகளில் வரைந்து வைத்து வழிப்பட்டிருக்கக் கூடும். ஆனால், அக்காலத்தில் அதுவொரு பொது நடைமுறையாக இருக்கவில்லை. ஓவியப்படங்கள் விஞ்ஞான வளர்ச்சியினால் அச்சுப்பிரதியாகிப் பரவத் தொடங்கிய பிறகே, இல்லங்களில் திருவுருவப்படங்கள் வைத்து வழிபடும் மரபு பிரசித்தமாயிற்று. எனவே, இந்தப் படம் வைக்கலாமா?, அந்தப் படம் வைக்கக் கூடாதா? என்பதெல்லாம் தற்கால மக்களிடம் எழுந்துள்ள முரண்களேயொழிய, தொன்று தொட்டு வந்த ஒன்றன்று.



**சிவஞானச் செல்வர்.**
**மருத்துவர்**
**ஈசான பிரதாபன்**
**தேசிகர்**

சைவசமயத்தவர் சிவபெருமானை முழுமுதற்கடவுள் என்று போற்றினால் மட்டும் போதாது, நடராசப்பெருமானை வீட்டில் வைத்து வணங்குவதும் அவசியம். கற்பனை கடந்த சோதியாகிய சிவபெருமானின் கருணையே நடராசப்பெருமானின் உருவமாகி, அற்புதக் கோலமாகத் திருச்சிற்றம்பலத்தில் நின்று பொற்புடன் நடனம் செய்கின்ற பூங்கழலைப் போற்றி வணங்குதல் சைவமக்களின் பிறப்பின் கடன் ஆகும்.

அப்பர்பெருமான், நடராசவடிவத்தினைத் தொழும்பேறு வாய்க்கும் என்றால் மானிடப்பிறவியினை மீண்டும் பெறுவதற்குத் தயார் என்கிறார்.

**குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே**

நடராசவடிவம் தமிழர் பண்பாடு உலகுக்கு அளித்த இறை தத்துவமாகும். ஒவ்வொரு அணுவும் ஆட்டத்திலேயே இருக்கின்றதென்னும்போது, அந்த ஆட்டத்தின் தலைவனாகிய நடராசப்பெருமானினை இல்லத்தில் பேணி வழிபடுதலினூடாக, தீவினைப் பலனால் ஏற்படக்கூடிய துன்பங்களினை ஒழிக்கமுடியும்

மங்கலக்கடவுளாகிய சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவ வடிவத்தினை சைவசமயத்தார் இல்லங்களில் வைத்துப் போற்றி வழிபட்டால் செல்வம், கல்வி, நீண்ட ஆயுள், மங்கலம் எனப் பெருகும். ஆனந்த நடனமாடும் இறைவன் திருமேனி இருக்கும் வீட்டில் மகிழ்ச்சி பொங்கி வழியும்.

### கோயிலில் பூசை செய்வதற்கு முன் வீட்டில் சிவபூசை செய்ய வேண்டுமா?

சைவக்கோயில்களில் பூசை செய்வதற்குரிய விதிகளினை காமிக ஆகமம், காரண ஆகமம், குமாரதந்திர ஆகமம் முதலிய பல்வேறு ஆகமங்களும் சோமசம்பு பத்ததி, அகோர சிவாசாரியர் பத்ததி முதலியனவும் கூறுகின்றன. இந்நூல்களில் சைவாலயத்தினுள் பூசைசெய்யும் அந்தணர் சைவசமய சந்திக் கிரியைகளும், சிவபூசையும் இல்லத்தில் நிறைவுசெய்தே திருக்கோயிலினுள் நுழையவேண்டும் என்று விதிக்கின்றன. கோயிலில் பூசை செய்யும் குருக்கள் மட்டுமல்ல, எந்தவொரு சைவசமய அந்தணரென்றாலும் சமய, விசேட, நிர்வாண தீக்கைகள் எடுத்திருத்தல் வேண்டும் என்றும், அங்ஙனம் தீக்கை எடுத்தோரே திருக்கோயிலினுள் பூசைகள் செய்வதற்கு தகுதியுடையோர் என்றும் சைவநூல்களில் கூறப்பட்டுள்ளன.

இவ்வுண்மைகளினை, சைவாலயங்களினை நிர்வாகஞ் செய்வோரும் அந்தணர் பலரும் அறியாததால், பூணூல் சடங்கு மட்டுமே செய்துகொண்ட அந்தணர் பலரும் பூசைசெய்து வருதல் கண்கூடு. இவ்வாறானோர் பூசை செய்தலும் அதற்கு அனுமதித்தலும் சிவபாதகமேயாகும். விசேடதீக்கை என்பது ஆன்மார்த்தமாக சிவலிங்கத்தினை பூசைசெய்வதற்குரிய தகுதியினை வழங்குகின்றது. ஆன்மார்த்தம் என்பது தனிப்பட்டரீதியில் சிவபூசை செய்தல் என்று பொருள். இத்தீக்கை எடுத்துக் கொண்டோர் தமக்குரிய ஆன்மார்த்த சிவலிங்கத்தினை தம்மோடு பேணி வருவர். நாள் தோறும் இந்த சிவலிங்கப்பெருமானுக்கு பூசைகள் முடித்தே, பிறர்க்குரிய பரார்த்தபூசை செய்யவேண்டும் ஆன்மார்த்த சிவலிங்க பூசை செய்யாத ஒரு அந்தணர், எந்தத் தெய்வத்திற்கு பூசை செய்தாலும் எந்த மந்திரத்தினை ஓதினாலும் அவையெவையும் பிறருக்கு எந்த நன்மையினையும் செய்யாது.

**கேட்போம் தெளிவோம் ஊடாக உங்கள் ஐயங்களைத் தெளிய, ஐயங்களை அனுப்பவேண்டிய முகவரி**
**தென்னாடு சிவமடம்,தென்னாடு வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**மின்னஞ்சல்** thennavan@thennadu.org
**புலனம்** +94 70 770 1111

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**1. கடவுள் என்று ஒரு பொருள் உண்டா? உண்டெனில் அதனை எவ்வாறு அறிவது?**

சைவ சமயம் கடவுளை நம்புகிற சமயம், கடவுள் உண்டு என்பது அதன் கொள்கை. கடவுள் உண்மையைப் பல வழிகளில் அது அறிவுறுத்துகிறது. சைவ நூல்களும் அருளாளரின் வாக்கும் செயலும் கடவுள் உண்மையைக் காட்டுகின்றன. தர்க்கமுறையிலும் அறிவியல் சார்ந்த தாகவும் விளக்கங்கள் சைவத்தில் தரப்பட்டுள்ளன.

ஒருவனால் ஆக்கப்பட்ட ஒரு பொருள் ஒரு காலப்பகுதியில் நிலைத்து நின்று பின் அழிகிறது. தோன்றி, நின்று, அழியும் எந்தப் பொருளுக்கும் ஆக்குபவன் அல்லது படைப்பவன் ஒருவன் வேண்டும். நாம் காணும் பெரு அண்டம் ஒரு காலத்தில் துகள் முட்டையாக (cosmic egg) இருந்தது. அதிலிருந்து தோன்றி, விரிந்து இன்றைய நிலைக்கு வந்துள்ளது. நீண்ட காலத்தின் பின் இது சுருங்கி மீண்டும் முன்னர் இருந்த நிலைக்குப் போகும். அதாவது, இப் பெரு அண்டத்திற்கும் தோற்றம், நிலைப்பாடு, அழிதல் ஆகிய நிலைகள் உள்ளன. இதனால் இதனையும் படைத்தவன் ஒருவன் இருக்கிறான் என்று நம்பலாம். அவனைப் பொதுவாகக் கடவுள் என்கிறோம்.

**2. சைவ சமயம் கடவுளை எவ்வாறு நோக்குகிறது?**

எல்லா உயிர்களுக்கும், எல்லா நாட்டினருக்கும் தலைவனாகக் கடவுளைச் சைவம் கொள்கிறது. எல்லா நற்பண்புக் கூறுகளின் முடிந்த முடிவாக, செம்மையின் நிறைவாக, இறைவனைக் கண்டு, அவனைச் சிவன் என்று அழைப்பது தமிழகத்துப் பண்பாகவும் மரபாகவும் உள்ளன. மாணிக்கவாசகச் சுவாமிகளின் பின்வரும் திருவாசகத் தொடர் இதனை உணர்த்துகிறது.

**"தென்னாடுடைய சிவனே போற்றி!"**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!"**

உலகுக்கு ஒருவனான இறைவனை தமிழர்கள் சிவன் என்று போற்றுகிறார்கள். சிவம் என்னும் சொல் செம்மை, மங்கலம் என்னும் பொருள் தருவது.

**3. சிவன் எத்தகையவன்? அவனது அருள் எத்தகையது?**

சிவனின் உள்ளார்ந்த இயல்பு அறிவு வடிவு. எங்கும் பரந்தும், எதிலும் கலந்தும், எதனையும் கடந்தும், இருப்பது அவனின் தன்மை. 'அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து' என்பது திருவருட்பயன் தரும் விளக்கம். கடவுள் என்ற சொல் எதனையும் கடந்தும் எதனுள்ளும் கலந்தும் இருக்கிறான் என்பதை உணர்த்துகிறது.

சிவன் உயிர்கள் மேல் அளவற்ற கருணையுள்ளவன். அறிவாகிய சிவனின் பிரிவில்லாதது அவனின் பெருங்கருணையாகிய அருள் ஞாயிறும் ஒளியும் போல் சிவனும் அருட்சத்தியும் பிரிவில்லாதவை.

**4. பதி என்ற பெயரைவிட வேறு பெயர்கள் சிவனுக்கு உண்டா?**

உயிர்களுக்கு தலைவன் என்ற பொருளில் அவன் பதி என்று அழைக்கப்படுகிறான். உயிர்களுக்கு அருள் வழங்கும் அவனின் நிலை பதி நிலை. இது அவனின் பொதுநிலையில், தன் நிலையில் பரன், தற்பரன், சிவன், சுத்த சிவன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறான். இப் பெயர்கள் தமிழ் நூல்களில் பிரமம் என்று அழைக்கப்படுவதைக் காணலாம்.

**5. சிவனின் இயல்புகள் எத்தனை? விளக்குக**

மாறுதல் அடையாமல் நிலைத்தல் உடைமை, பேரறிவு உடைமை, பேரின்பமுடைமை ஆகியவை சிவனின் குணங்கள் என உபநிடதங்கள் உணர்த்துகின்றன. இவை முறையே சத்து, சித்து, ஆனந்தம் எனப்படும். சச்சிதானந்தம் (சத்சித்ஆனந்தம்) என்ற இறைவனின் பெயர் இதனைக் குறிப்பது.

ஆகமங்கள் சிவனை எட்டு குணங்கள் உடையவன் என்று கூறும். இக் குணங்கள் வருமாறு:

1. தன்வயத்தன் ஆதல்(சுவதந்திரத்துவம்)
2. தூய உடம்பினன் ஆதல் (விசுத்த தேகம்)
3. தூய உடம்பினன் ஆதல் (அனாதி போதம்)
4. இயற்கை உணர்வினன் ஆதல் (அனாதி போதம்)
5. முற்றும் உணர்தல் (சர்வஞ்ஞத்துவம்)
6. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் (நிராமயம்)
7. பேரருள் உடைமை (அலுப்த சக்தி)
8. முடிவிலாற்றலுடைமை (அநந்த சக்தி)
9. வரம்பிலின்பமுடைமை (நித்திய திருப்தி)

(எண் குணங்களும் தமிழில் தரப்பட்டு அவற்றின் வடமொழிப் பதங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.)

இறைவன் எண்குணத்தான் என்ற பெயரில் திருக்குறளிலே குறிக்கப்படுகிறான்.

**"கோளிற் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத்தலை"** - குறள்

இக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், இறைவனின் எண்குணங்களாக மேலே குறிப்பிடப்பட்ட குணங்களைத் தருகிறார். முடிவிலே 'இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது' என எழுதுகிறார். பரிமேலழகர் ஒரு வைணவ சமயத்து ஞானி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே கூறப்பட்ட எட்டுக் குணங்களும் ஆகம வழக்காக வந்தவை. உபநிடத வழக்காக வந்த சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று குணங்களின் விரிவாக இவை உள்ளன.

**6. கடவுளுக்குக் குணங்கள் இல்லை, அவன் குணங்களைக் கடந்தவன், என்றெல்லாம் சொல்லப்படுகிறதே. இது குறித்த விளக்கம் என்ன?**

கடவுள் நிர்க்குணன் (குணங்களற்றவன்), குணாதீதன் (குணங்களைக் கடந்தவன்) என்றெல்லாம் கூறப்படுவது உண்மை. இவற்றின் பொருள் உயிருக்கு உள்ள குணங்கள் அல்லது இயல்புகள் இல்லாதவன் என்பதே. சத்துவம், இராசதம், தாமசம் ஆகியவை உயிரின் இயல்புகள். இறைவனுக்கு உயிருள்ள இத்தகைய இயல்புகளும் இல்லை, குணங்களும் இல்லை, இவற்றைக் கடந்தவன் இறைவன்.

**7. கடவுளின் பொது இயல்பு, சிறப்பு இயல்பு என்பவை எவை?**

கடவுளின் இயல்பு இரண்டாகக் கொள்ளப்படும். இவை சிறப்பு இயல்பு, பொது இயல்பு ஆகும். இவற்றை முறையே சொருபலக்கணம், தடத்தலக்கணம் என்பர். சைவ சித்தாந்தத்தில் காணப்படும் இறைவன், உயிர், ஆணவம், கன்மம், மாயை ஆகிய ஐந்திற்கும் இத்தகைய இருவித இயல்புகள் உண்டு.

எதிலும் தொடர்பு இன்றிக் தன்னளவில் நிற்பது சொருபலக்கணம் என்னும் சிறப்பு இயல்பு. இந்நிலை அதன் காரண வடிவு என்று கொள்ளப்படும். பிற பொருள்களோடு தொடர்பு கொண்டு நிற்கும் நிலை தடத்தலக்கணம் என்னும் பொது இயல்பு. இதன்நிலை அதன் காரிய வடிவு என்று கொள்ளப்படும்.

இறைவன் தன்னளவில் எந்த மாறுதலுமின்றி உயிர் களுடனும் பிற பொருட்களுடனும் எந்தத் தொடர்புமின்றி இருக்கும் நிலை அவனின் சிறப்பு இயல்பு. அவன் அவற்றுடன் தொடர்பு கொண்டு இருக்கும் நிலை அவனின் பொது இயல்பு.

இறைவனின் பொது இயல்பாக இரு நிலைகள் உள்ளன. ஒன்று அவனின் பிரிவில்லாத அருளைத் திருமேனியாகக் கொண்டு பல வடிவங்கள் தாங்கி நிற்கும் நிலை. இன்னொன்று உயிர்களுடனும் பிற பொருட்களுடனும் ஒரே நேரத்தில் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் நிலை. இது அவன் கொள்ளும் அத்துவித உறவு நிலை.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# பண்டைத் தமிழருக்கு ஒரு தொடராண்டு இல்லையா?
# தைத் தமிழ்ப் புத்தாண்டு வரலாறும் அதன் இடர்பாடுகளும்



முனைவர். இரா.சிவகுமார், (மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம்)

### (சித்திரையே தமிழர் புத்தாண்டு)

தமிழர் கால ஐந்திர (பஞ்சாங்க ) வானியல் அறிவியல், பண்டைய காலம் தொட்டு மிக நுட்பமாக , நூதனமாக உருவாக்கப்பட்டு செயலிலிருந்தாலும் , அதனின் ஆழறிவியல் துலக்கத்தை முழுமையாக ஆராயாது, அதன் வானியல் இயற்பியல் (Astro physics) உண்மைகளை வலுவூட்டி முறையாக வெளிக்கொணராது, தமிழர் வானியல் கணிய வள்ளுவ கல்வி இன்று புறக்கணிக்கப்பட்டு கிடப்பது தமிழர்களுக்கு நிகழும் பேரிழப்பாகும்.

தமிழர் கால அறிவியல் இன்று பல்வேறு குழப்பங்களில் நிலைக்கெட்டு நிற்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முதன்மையானது, தமிழர் கால ஐந்திர (பஞ்சாங்க ) வானியல் அறிவியலில் உருவாகிய பெயரா ஆடு ஆய கணிதப்புள்ளியில் (Fiducial goat origin mathematical point) அமையப்பெற்ற சித்திரை தமிழ்ப் புத்தாண்டைக் கைவிட்டு, தைத் தமிழ்ப் புத்தாண்டை வலுக்கட்டாயமாகத் தமிழர் வாழ்வினில் புகுத்த முயலும் சிலரின் முனைப்பாகும். இம்முனைப்பு தமிழர் பெரு கால அறிவியல் தொல் வரலாற்றை புரட்டிவிடும் என்பதை அவர்கள் அறியாது, தெளிவில்லாது செயல்படுவது மேலும் பல குழப்பங்களைத் தொடர்ந்து தமிழர்களுக்கு விளைவித்துவருகின்றன. ஆதலால் தைத் தமிழ் திருவள்ளுவர் புத்தாண்டு உருவாக்கத்தை, வரலாற்றை அதன் இடர் பாட்டைத் தெளிவிக்கப் பட வேண்டிய நோக்கத்திற்காக இக்குறுங்கட்டுரை படைக்கப்படுகின்றது.

அதனை விரிப்பதற்கு முன்பு, தைத் தமிழ் திருவள்ளுவர் புத்தாண்டு தோன்றியதற்கான ஒரு நீண்ட வரலாற்று ஆய்வினை காலவரிசைப்படிச் சுருக்கி இங்கே இணைத் துள்ளேன். உவங்கள் இதழில் வெளிவந்த ‘திருவள்ளுவர் ஆண்டு - ஒரு மறைக்கப்பட்ட வரலாறு!’ ஆய்வின் சாரத்தை எடுத்து அதனோடு சில அரிய குறிப்புகளையும் இணைத் துள்ளேன். அத்தொகுப்புக்கு கட்டுரையின் எழுத்தாளருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### தைத் தமிழ் திருவள்ளுவர் புத்தாண்டு உருவாகிய வரலாறும் அதன் பின்புலங்களும்

1) திருவள்ளுவர் விழா தொடங்க வேண்டும், திருக்குறளை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற கொள்கை தீவிரமாக 1920களில் தோற்றம் பெற்றுவிட்டது.

2) வள்ளுவர் கி.மு 31 ஆம் ஆண்டு வைகாசி அனுச நட்சத்திரத்தில் தோன்றினார் என்று மறைமலையடிகள் கணித்திருந்தார் (மறை திருநாவுக்கரசு ,1959). ஆனால் அதனைத் தமிழருக்கான ஆண்டுக் கணக்கு தொடராண்டாக, அல்லது திருவள்ளுவர் நாட்குறிப்பாகப் பெயர்க்க வேண்டும் என்று அவர் பதிவு செய்யவில்லை. காரணம் திருவள்ளு வராண்டைத் தொடங்க வேண்டிய முதல் நாளை அப்பொழுது எக்குழுவினரும் முடிவு செய்யவில்லை.

3) 1922இல் தென்காசித் திருவள்ளுவர் விழாவில் இருந்து தொடங்கிய திருவள்ளுவர் திருநாளானது, வள்ளுவர் பிறந்த தினமாக நம்பப்படும் வைகாசி அனுசத்திலேயே கொண் டாடப்பட்டு வந்தது என்பதை அக்கால ஆவணங்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறது திருவள்ளுவர் திருநாள் மலர்.

4) திருவள்ளுவர் ஆண்டுத்தொடரின் படி அமைந்த திருக்குறள் நாட்குறிப்பொன்றை திருநெல்வேலி சைவசித்தாந்தப் பதிப்புக் கழகம், 1922இல் வெளியிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தது (திருவள்ளுவர் திருநாள் மலர், பப. 27 - 32).


5) 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத்தில் முழுவீச்சுடன் எழுந்த தனித்தமிழியக்கம், சைவ மறுமலர்ச்சி இயக்கம், திராவிட இயக்கம் என்பவற்றின் பங்களிப்புடன் தமிழகமெங்கும் உருவான திருவள்ளுவர் கழகங்களில் திருவள்ளுவர் திருநாள்கள் கொண்டாடப்பட்டன.

6) அவற்றில் 1927 முதல் தொடர்ச்சியாக வைகாசி அனுசத்தில் திருவள்ளுவர் விழாக் கொண்டாடிய பேராசிரியர். ரா.பி.சேதுப்பிள்ளையின் தலைமையில் அமைந்த தென்காசித் திருவள்ளுவர் கழகம் பற்றிய தகவல் மட்டும் இப்போது கிடைக்கிறது. (மேற்படி, பப.26, 30).

7) 1929ஆம் ஆண்டு தென்னிந்தியச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் முதற் தடவையாகச் சைவ ஆகமப்படி கால ஐந்திரம் (பஞ்சாங்கம்) ஒன்றை வெளியிட்டனர். இவ்வாண்டில் சார்வரி வருடப் பஞ்சாங்கம் வெளியிடப் பட்டது. தமிழ்ப் பெரும் புலவரும் சோதிட மருத்துவ வல்லாரும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அமைச்சருமாகிய திரு.இ.மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் ஆகம முறைப்படி அமைத்து கொடுத்த சைவப் பஞ்சாங்க குறிப்புக்களே திருக்குறள் நாட்குறிப்புக்குப் பயன்படுத்தப் பெற்றன (நவநீதகிருடிணன், 1964).

8) 1935 இல் சென்னையில் தமிழறிஞர்களால் திருவள்ளுவர் திருநாட் கழகம் நிறுவப்பெற்றது (நவநீதகிருடிணன் ,1964). இவற்றில் முதன்மையான விழா (1935), சென்னை பச்சையப்பன் கல்லூரியில், மறைமலை யடிகள், திரு.வி.கலியாணசுந்தரனார், தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலான முக்கியமான தமிழறிஞர்களின் தலைமையில் இடம்பெற்றது.





“திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் அனுடம் (பனை) என்றே குறித்துவிட்டனர்” என்கிறார் மறை. திருநாவுக்கரசு (மறைமலையடிகள் வரலாறு பக். 773-774) திருநாவுக்கரசர் நூல் 1959 இல் வெளிவந்தது. ஆனால் தற்காலத்தில் சில தரப்பினர் கூறும் , தை மாதம் - தமிழ்ப் புத்தாண்டு (தமிழாண்டுத் தொடக்கம்), தமிழ்த் தொடராண்டு (வள்ளுவ ஆண்டு) (தமிழாண்டுக்குத் தொடராண்டு உருவாக்குதல்) - 500 தமிழ்ச் சான்றோர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னைப்பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி முடிவெடுத்தனர் என்பது முற்றிலும் ஒரு பொய்யுரைப்பு ஆகும். மறைமலையடிகளின் பெயரன் திரு.மறை தி.தாயுமானவன் எழுதிய ‘மறைமலையடிகளாவர் அடிச்சுவட்டில்’ என்ற மறைமலையடிகளாரின் வரலாற்றுக் குறிப்பு நூலில், 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 500 தமிழ் சான்றோர்கள் கூடிய குறிப்போ தமிழ் தைப்புத்தாண்டைத் தமிழாண்டுத் தொடக்கமாக ஏற்கும் தீர்மானக் குறிப்போ எங்குமே எழுதப்பட வில்லை, குறிக்கப்படவில்லை என்பது மிகத்தெளிவு (சிவகுமார் , 2023).

9) ‘திருவள்ளுவர் திருநாள்’ இந்தியாவில் மாத்திரமன்றி தமிழர் விரவி வாழும் இலங்கை, மலேசியா,சிங்கப்பூர், பர்மா ஆகிய நாடுகளிலும் கொண்டாடுவதற்கான கோரிக்கை தென்காசித் திருவள்ளுவர் கழகத்தினரால் விடுக்கப்பட்டு 1935இல் வைகாசி அனுசம் அமைந்த மே 17, 18 திகதிகளில் உலகெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

10) வைகாசி அனுசத்து திருவள்ளுவர் திருநாள் 1935 ற்குப் பின் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மறு ஆண்டு 1936 ஜூன் 4ஆம் திகதி சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் உ.வே.சாமிநாதர் தலைமையில் அது நடைபெற்றது.

11) 1940 பங்குனியில் வெளியான செந்தமிழ்ச்செல்வி இதழின் குறிப்பின் படி, தமிழகத்தில் திருவள்ளுவர் திருநாள்கள் பெரும்பாலான ஊர்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்றன.

12) நான்கு தரப்பினர்களின் எதிர்ப்புகள் எழுந்தன.முதல் தரப்பினர் திருவள்ளுவர் திருநாளை, அவர் பிறந்த வைகாசி அனுசத்தில் அன்றி, வள்ளுவர் குருபூசை நிகழ்த்தப்படும் மாசி உத்தரத்திலேயே கொண்டாட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. அடுத்து வள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றியதாக நம்பப்படும் வைகாசி விசாகத்தில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட வேண்டும் என்றது ஒரு தரப்பு. இன்னொரு தரப்பு ஆடிப்பெருக்கை அண்டிய ஒருநாளில் வள்ளுவர் விழா கொண்டாடலாம் என்றது. இறுதித் தரப்பு, நம்பிக்கை சார்ந்த நட்சத்திரங்களைப் பார்க்காமல், தமிழர் திருநாளான தைப்பொங்கலன்று தான் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்று கோரி வந்தது. இதில் இறுதிக் கோரிக்கையை முன்வைத்த தரப்பு சற்று வலுவானது. அந்தத் தரப்பில் மிக முக்கியமானோர் இருவர். கி.ஆ.பெ. விசுவநாதம் மற்றும் சோமசுந்தர பாரதியார்.

13) “மகான்களுடைய திருநாட்களைக் கொண்டாடவேண்டியது அவசியம் என்றைக்குக் கொண்டாடினால் என்ன?” என்னும் கேள்விக்குத் திருப்திகரமான விடையிருப்பது கடினமான காரியம். ஆயினும் நாடெங்கும் ஒரே தினத்தில் கொண்டாடுவதில் சில அனுகூலங்கள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. அவ்விதம் ஒரு தினத்தைக் குறிப்பிடவேண்டும் என்று ஏற்படும்போது, மறைமலையடிகள் போன்றவர்கள் ஒப்புக்கொண்ட வைகாசி அனுடத்தையே வைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும்.” - கல்கி (ஏப்ரல் 12, 1958) வெளியீடு.

14) இரத்தினத்தார் 1954இல் திருவள்ளுவர் திருநாளுக்கான கோரிக்கையை விடுத்தபோது, அதற்கான மறுப்பொன்றை விசுவநாதத்தார், சுதந்திரன் இதழில் எழுதியிருந்தார். “திருவள்ளுவர் பிறந்தது வைகாசி அனுடம் என்பதற்குச் சான்று எதுவும் இல்லை. திருவள்ளுவர் திருநாளை இனி நாம் தைப்பொங்கலன்றே கொண்டாட வேண்டும். ஏனெனில் அதுவே காலம் காலமாகத் தமிழர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது” என்பது அந்தக் கடிதத்தின் சாரம்.

15) தை முதல் நாளில் தைப்புத்தாண்டு அல்லது திருவள்ளுவர் தொடராண்டு யாரால், எப்போதிருந்து கொண்டாடப்பட ஆரம்பித்தது என்ற சரியான குறிப்பேதும் கிடைக்கவில்லை. ஆனால் இரத்தினத்தாரே இன்னொரு இடத்தில் இப்படிச் சொல்கிறார்: “வைதீகக் கொள்கை, தனித்தமிழ்க் கொள்கை, திராவிடக் கொள்கை முதலிய பல கொள்கைகளையுடைய பத்திரிகைகளின் ஆதரவு கிடைத்தமை எமக்கு பேரூக்கத்தை தந்ததெனினும், ஒருவரேனும் வைகாசி அனுடத்தை விட்டுவிட்டுத் தைமாதம் முதல் நாளைக் கொண்டாடவேண்டும் என்று எமக்கு எழுதவில்லை. அத்துடன் 1935இல் தமிழ்நாட்டிலிருந்த தமிழ்ப் பேரறிஞர்கள் யாவரும் சாதி, மத அரசியற் கட்சி வேறுபாடுகளின்றி ஒன்று சேர்ந்து வைகாசி அனுடத்தில் தான் கொண்டாடினார்கள். தமிழ்நாட்டிலுள்ள பல கட்சித் தலைவர்களும் பெரியார். ஈ.வே இராமசாமிநாயக்கர், அறிஞர்.சி,என். அண்ணாத்துரை முதலியோரும் கூட அவ்வாண்டில் நடைபெற்ற கொண்டாட்டங்களிலே கலந்து கொண்டனர். அன்பர் விசுவநாதம் அப்பொழுது அந்த விழா நாளை வேண்டாம் என்று கூறியதாகவோ தை முதல் நாளைத்தான் கொண்டாடுவோம் என்று கூறியதாகவோ அறிய முடியவில்லை. அவர் கூறியிருக்க மாட்டார் என்றே நாம் கருதுகிறோம். அரசியற் கட்சி வேறுபாடுகளைத் திருவள்ளுவர் திருநாளுடன் மோதச் செய்யாதிருக்குமாறு தமிழ்மக்கள் யாவரையும் வேண்டிக்கொள்கிறோம்.” (பப.18 -19) .

16) இதே போல், இரத்தினத்தாரது கூற்றை வைத்தே சைவசித்தாந்தப் பதிப்புக் கழகம் நாட்குறிப்பு வெளியிட முற்பட்ட 1922ஐ திருவள்ளுவர் ஆண்டுத் தொடருக்கான மிகப்பழைய கால வரையறையாக முடிவெடுக்கலாம். (1922இல் வெளியிட முற்பட்ட முயற்சி தான். பத்தாண்டுகளுக்குப் பின் 1932 இலேயே திருக்குறள் நாட்குறிப்பாக வெளியிடப்பட்டது.) ஆக, திருவள்ளுவர் ஆண்டுத்தொடர் தைப்புத்தாண்டு கோரிக்கைக்கும் முன்பே புழக்கத்தில் வந்து விட்டது தெரிகிறது.

17) பொங்கற்றிருநாளைக் கொண்டாடவேண்டுமென்று அறிக்கைகள் விட்டு ஆர்வத்தை உண்டாக்கியவர்கள் சென்னைத் தமிழறிஞர் கழகத்தாராவர். இவர்கள் 1941ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் விட்ட அறிக்கையிலே தை முதல் வாரத்தைத் தமிழ் வாரமாகவுங் கொண்டாடுமாறு கேட்டுள்ளனர். இந்த அறிக்கையிலே ஐந்தாம் நாளைப் புலவர் தம் திருநாளாகக் கொண்டாட வேண்டும் என்றுங் குறிப்பிட்டு ள்ளனர். இந்த வாரத்தைக் கொண்டாடிய இரண்டொரு சங்கங்கள் இந்த வாரத்தில் ஒரு நாளை வள்ளுவர் திருநாளாகவும் பின்னர் கொண்டாடி உள்ளனரேயன்றி முதல் நாளை - தைப்பொங்கற் புது நாளை வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடவில்லை.”-ப.32அ.

18) 1962 இலிருந்து, கிரகோரியன் ஜூன் 02ஆம் திகதி திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு வந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

**பண்டைத் தமிழருக்கு ஒரு தொடராண்டு இல்லையா?**
**(07ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்நிலையில் 1967இல் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து, 1971இல், திருவள்ளுவர் திருநாள் தைப்பொங்கலன்று மாற்றப்பட்டது. அது ஏற்கனவே விடுமுறை நாள் என்பதால், அதற்கடுத்த தை 02ஆம் நாள், திருவள்ளுவர் திருநாளுக்கான விடுமுறையானது. தை முதல் நாள் பொங்கலைத் தமிழர் தேசிய விழாவாகக் கொண்டாடும் தீர்மானத்தை அறிஞர்களும் அரசினர்களும் ஏற்ற பின்னர்தான் தமிழர் ஆண்டு என்ற ஒரு புதிய முறை மெல்ல நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆகவே திருவள்ளுவர் பிறப்பாண்டு, திருவள்ளுவர் தினம், திருவள்ளுவர் நட்குறிப்பு, திருவள்ளுவர் தொடராண்டு, தை முதல் நாள் என்று ஒன்றன் மேல் ஒன்றாக மெல்ல வளர்ச்சிப்பெற்று, தமிழ் இன கால ஆண்டாக அரசியல் முன்னெடுப்பில், நிலைகொண்டது என்பது தெளிவு.

இந்தத் தைத் தமிழ் திருவள்ளுவர் புத்தாண்டு உருவாக்க வரலாற்றுக் குறிப்பு நிரலை வேண்டுமானால் மேலும் பல சான்றுகளுடன் சரிசெய்து வளப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் திருவள்ளுவர் தைப்புத்தாண்டு- தொடராண்டு பண்டைத் தமிழ் கால அறிவியலுக்கு விளைவித்த, விளைவிக்கும் இடர்பாடுகளை எப்படிக் களைவது? என்பதை ஆய்வு செய்வோம்.

**திருவள்ளுவர் தைப்புத்தாண்டு மற்றும் தொடராண்டு இடர்பாடுகள் என்ன ?**

திருக்குறளின் சிறப்பினை போற்றி எங்குமே கேள்வி எழுப்பாது, தற்கால சில தமிழறிஞர்களால் தேர்வாகியுள்ள திருவள்ளுவர் தைப்புத்தாண்டு ரூ தொடராண்டு விளைவிக்கும் இடர்பாடுகளைச் சிறிது ஆய்வு செய்வோம்.

தற்கால தமிழ் அறிஞர்களின் முடிவுகளும், கருத்துக்களும் எவையாயினும் வள்ளுவப் பெருந்தகையின் சான்றாண்மை இலக்கணத்திற்கு ஏற்ப பட்டகைச் சான்றுளோடு (TRUTH discerning evidence) உண்மைகளை வெளிக்கொணர்வது நமது கடமை.

**எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள். 423)**

Purport: To grasp or discern the TRUTH from whomsoever spoken, from diverse knowledge is wisdom fair.

தைத் திங்கள் நமது தமிழ் மரபு போற்றும் திருமாதமாக இருந்தாலும் வானியல் கிரக கால இயக்கத்திற்கு, இயற்கை வாழ்வாதாரம் தொடங்கும் தமிழாண்டுக் காலத்திற்கு ஏன், எவ்வாறு முதல் ஆகாது என்பதை விரித்துக் காண்போம்.

1) திருவள்ளுவர் திருநாள் தை மாதத்தில் அல்லாது வைகாசித் திங்களில் கொண்டாடப்பட்டது. திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் அனுடம் (பனை) என்றே குறித்துவிட்டனர்" என்கிறார் மறை. திருநாவுக்கரசு (மறைமலையடிகள் வரலாறு பக். 773-774). பின்பு கி.ஆ.பெ. விசுவநாதம் மற்றும் சோமசுந்தர பாரதியார் போன்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க வைகாசியிலிருந்து திருவள்ளுவர் திருநாள் தைத்திங்களுக்கு மாற்றப்பட்டது. தையிலும் திருவள்ளுவர் திருநாள் தை முதல் நாளாகக் கொண்டாடப்படவில்லை. இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டியது. திருவள்ளுவர் திருநாள் என்பது திருக்குறளைச் சிறப்பிக்கும், அதற்குச் சிறப்பு சேர்க்கும் ஒரு நாள். அது தமிழர் வானியல் காலக் கணிய புத்தாண்டு அல்ல. ஆகவே தைப்புத்தாண்டு தமிழர்கள் புறக்கால வானியல் கணித அறிவியல், தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) அறிவியல் கணிப்பில் உருவான ஆண்டுப்பிறப்பல்ல. இந்தத் தைத் திங்கள் மாற்றத்திற்கான முடிவுகள் எந்தப் புறக்கால வானியல் கணித அறிவியல் பின்புலம் இல்லாது, சாராது, தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) அறிவியல் கணிப்பின் பெயரா ஆடு ஆயப்புள்ளியோடு (Fiducial goat origin point) ஆட்படாது, உட்படாது, தொல்காப்பியம், சங்கத்தமிழ், பிங்கல நிகண்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களின் கால ஆய்வு இல்லாது வெறுமனே தைப்பொங்கல் திருநாள் சிறப்பிற்காகவும், விடுமுறை தேவைக்காவும் மாற்றப்பட்டது. ஆனால் பெயரா ஆடு ஆயப்புள்ளியை (fiducial goat origin point) ஆடு ஈ ஆட்டை ஈ யாடு, யாண்டு, ஆண்டு என்று மருவிய சித்திரை மேழப்புத்தாண்டு பிறக்கும் குறியாக வானியல் அறிவியலின் அடிப்படையில் நமது சங்கத்தமிழ் கணிய வள்ளுவ பெருந்தகைகள் நிறுவினர். இதனைச் சங்கத்தமிழ் பெருங்குன்றூர் கிழார், பதிற்றுப்பத்தில் (பதி.90: 51-54)

**யாண்டு ஓரனைய ஆக யாண்டே**

என்று ஆடு மேழவிழுவில் சேர ஆகும் புத்தாண்டே என்று மிக நுட்பமான பதிவினைச்செய்வார்.

**திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக (பத்து.160),**

என்று சங்கத்தமிழ் நக்கீரர் (கி.பி 250) பத்துப்பாட்டு நெடுநல்வாடையில், ஆடு/மேழ ஓரை முதலாக இருப்பதை உறுதிசெய்வார். வருடம், வருடை ஸ்ரீ மலையாடு, மேடம் அல்லது மேழம் எனும் ஆட்டைக் குறிக்கும் சொல்லாகவே நிற்பது மறுப்பதற்கில்லை.

**சித்திரை முதலாச் சென்மாத மிரண்டா - வத்தனவெண்ணிக் கொள்கவென்ப (நிகண். பிங்கலம் 212)**

என்று பிங்கல நிகண்டு சித்திரையே ஆண்டுப் பிறப்பின் முதல் திங்கள் என்று தெளிவுப்பட எடுத்து விளக்கி இருக்கையில், குளுமையின் கடை நாள் என்றே குறிப்பிடப்படுகின்ற தொல்காப்பிய ஆறு கால பகுப்பிற்கு முரணான

**தை இ நின்ற , தண் பெயல் கடை நாளை (அகம். 269/14)**

அல்லது தைத் திங்களை தற்கால தமிழறிஞர்கள் தேர்வு செய்த வானியல் கால அறிவியல் தான் என்ன? சித்திரையில் நால் ஏழ் நாளினும்- 7*4=28).இருபத்தெட்டு (28) நாட்களுக்குக் கொண்டாடப்பட்ட ஒரே தமிழர் பெரு விழா தேவர்களை வழிபடும் இந்திர திருவிழா ஒன்றே.

**மேலோர் விழைய விழாக் கோள் எடுத்த நால் ஏழ் நாளினும் நன்கு இனிது உறைக என அமரர் தலைவன் ஆங்கு அது (மணி. 105-108)**

என்று மணிமேகலை பதிவுசெய்திருப்பதும்,இந்திர விழவூரெடுத்த காதையில்


**"சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென (வரி 64)"**

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் உறுதிசெய்திருப்பதும், வானோருக்குச் செய்யும் சிறப்பொடு பூசனைத் திருவிழா, திருவள்ளுவர் காலத்திலும் பெருவிழாவாக இருந்துள்ளதை

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு (குறள். 18)**


திருவள்ளுவரும் மேலும் உறுதிப்படுத்தியிருந்தும், தற்கால தமிழ் அறிஞர்கள் இத்தகவல்களை ஒரு பொழுதும் தமிழர் கால கணிய அறிவியலுக்கு, தரவுகளாக்காது (நளனைநடஉெந), சான்றுகளாக்காது, கால பட்டகைகளை (கயஉவள) முற்றிலும் அகப்படுத்தாது, தைப்புத்தாண்டு மாற்றத்தைக் கோரும் முடிவுகளை முனைந்து செய்திருப்பது, எத்தகைய தமிழ் கால மரபு திரிக்கும் முயற்சியாகும். அதனை எப்படி ஆதரிப்பது, போற்றுவது. தொல்காப்பிய, சங்கத் தமிழ் திருவள்ளுவ, சிலப்பதிகார வானியல் கால அறிவியல் தரவுகளைத் தமிழ் அறிஞர்கள் முறையாக சீர்தூக்காது, செம்மையாகத் தமிழ் கால ஆய்வினை மேற்கொள்ளாது, தமிழ் காலக் கணியர்களை, வானியல் அறிஞர்களைக் கலந்தாய்வு செய்யாது (கலந்தாலோசிக்காது) முடிவு செய்தது, தமிழுக்கும், தமிழர்களுக்கும் செய்த நியதி ஆகுமா? இது தமிழ் மரபின் ஆணி வேரையே தகர்ப்பதாக இருக்கின்றதே?

2) முதலில் நாம் உணரவேண்டியது, தைப்பொங்கல் திருவிழாவே, தமிழர் ஐந்திர (பஞ்சாங்க) சித்திரை ஆண்டு கணிப்பு முறையில் தான் இன்று வரை கொண்டாடப்படு கின்றது. தமிழர்கள் நாள்காட்டியில் எழும் எந்தத் திருநாளும் தமிழர் ஐந்திர பஞ்சாங்கத்திலிருந்து எழுபவையே. தமிழர்கள் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு திருநாளுக்கும், வானியலில் கிழமை, நாள்மீன், திதி போன்ற ஓர் அறிவியல் நிலைப்பாட்டோடு, வாழ்வியல் நலன் காண் கால திறனோடு (எ.கா : காலம் அறிதல் -10 திருக்குறள்கள்)'திரு தெய்வ இயல்பு பொருந்த' செயல்படுத்தப்படுபவையாகும்.




அப்படியிருக்கையில் ஐந்திர பஞ்சாங்கத்தையே புறந்தள்ளி சுறவம்( தை ) திங்களில் பிறக்கின்ற புதிய தைப்புத்தாண்டு கால முன்னெடுப்பு, எந்த வானியல் காலக் கணிய அடிப்படையில் தமிழறிஞர்களால் ஏற்கப்பட்டது? புதிய தமிழ் ஐந்திர பஞ்சாங்கம் என்று தமிழர்களுக்கு இதுவரை எங்காவது உண்டா? இல்லையே. பிறகு எப்படி தைப்புத்தாண்டு மாற்றத்தை ஆதரித்துத் தொடர்ந்து ஏற்கத் தமிழ் மக்களை வலியுறுத்தி வருகின்றனர்?

3) தமிழர் ஐந்திர (பஞ்சாங்க) சித்திரை ஆண்டுக் கணிப்பு சூரியனும் உடுக்களும் (நட்சத்திரங்களும்) சந்திரனும் சேர்ந்த உடுபெயரா ஆண்டு (Sidereal Year- Fixed star) அல்லது உடுகணியமாகும்.




உடுக்கணிய (Sidereal Prediction) முறை, நிரயன பெயரா ஆடு ஆயப்புள்ளியை ( fiducial goat origin point ) வைத்துத் தமிழர் ஆண்டுக் கணிக்கப்பட்டாலும், பெயரும் மேழவிழுவ சாயன இளக்க ஆடு ஆயப்புள்ளியையும் ( flexible goat origin point ) உள்ளடக்கி , சூரிய மான (சௌரமான) கணியத்தையும் ( Tropical year prediction), சந்திர மான (Lunar Prediction), வியாழ மான (Jupiter or Jovian year prediction), காரி (சனி) மான (Saturn year prediction), கனையழல் மான (Intense Heat prediction), சாவமான ஆண்டு (Savamana Year Prediction) செய்ய இயலச் செய்வதால் வானியல் கணிய முறையில் தமிழர் சித்திரை ஆண்டுக் கணிப்பு முறை சிறப்புடையதாகின்றது. உடு பெயரா காலக் (Sidereal year ) கணித அறிவியலைக் கொண்டு எல்லா ஆண்டு கால அறிவியலையும் கணிக்க இயலும். ஆனால் தைப்புத்தாண்டு கணிப்பு சூரிய அயணப்பெயர்ச்சிக்குத் தமிழர் கால கணியத்தை பெயர்த்துவிடும். சூரிய மான கணியம் (சூரியமான ஆண்டு - Tropical Year: Course of the sun northward or southward) உத்தராயண வேனில்முடங்கலிலிருந்து (summer solstice), பனிமுடங்கல் (Winter Solstice) சென்று மீண்டும் வேனில்முடங்கள் (summer solstice) தொடக்கப்புள்ளிக்கு வரும் காலமாகும்.








இக்கணிப்பு ஆங்கிலேயர்கள் பின்பற்றும் சூரிய மான (சௌரமான) (Tropical year prediction) வானியல் கணிதமாகும். இதைக் கொண்டு சந்திர மான (Lunar Prediction), வியாழ மான (Jupiter or Jovian year prediction), காரி (சனி) மான (Saturn year prediction) , கனையழல் மான (Intense Heat prediction) கணிதங்கள், கணியங்கள் செய்ய இயலாது.

தொடரும்...

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:

# எம்பிரான் திருஞானசம்பந்தன்



## திருஞான சம்பந்தர் திருமணம் ஏற்றலும், சிவசோதியிற் கலத்தலும்

சிலநாளாயினபின், பிள்ளையார் திருமயிலாப்பூரை அகன்று, அங்குள்ள திருத்தொண்டர்கள் விடைகொள்ள, சிவநேசருக்கு வருத்தம் நீங்கும்படி மதுரமொழி அருளி விடைகொடுத்துச் சென்று, திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்று, திருவச்சிறுபாக்கம், திருவரசிலி, திருப்புறவார்பனங்காட்டூர் முதலாகிய தலங்களை வணங்கிக் கொண்டு, சிதம்பரத்தை அடைந்து, காலந்தோறும் சபாநாயகரை வணங்கிக் கொண்டு எழுந்தருளியிருந்தார். சிவபாதவிருதயரும் சீர்காழியில் உள்ள மற்றை அடியார்களும் **“பிள்ளையார் சிதம்பரத்தில் வந்து எழுந்தருளியிருக்கின்றார்”** என்று கேள்வியுற்று, வந்து சேர்ந்தார்கள். பிள்ளையார் அவர்களோடு சபாநாயகரை வணங்கி அருள்பெற்று, சிதம்பரத்தை அகன்று சீர்காழியை அடைந்து, காலந்தோறும் தோணியப்பரை வணங்கிக் கொண்டு எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, முருகநாயனார், திருநீலநக்க நாயனார் முதலாகிய திருத்தொண்டர்கள் சுற்றத்தார்களோடு சீர்காழியில் வந்து பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதுபோழ்து, சம்பந்தருக்கு அகவை பதினாறு ஆகி விட்டதால், அவருடைய தந்தையாரும் உறவினர்களும் அவர் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறி திருமணம் செய்து கொண்டால்தான், ஒருவர் வேள்வி முதலிய சமயச் சடங்குகளைச் செய்யும் உடையவராகிறார் என்றும் எடுத்துக் கூறினர்.

திருஞானசம்பந்தருக்கு உலக வாழ்வில் பற்றில்லை. ஆதலின் அவர், **“நீங்கள் சொல்வது மற்றவர்களுக்குப் பொருந்தும் எனக்கு அது பொருந்தாது”** என்று மறுத்துரைத்தார். அவர் நலம் நாடும் நல்லோர் **“தாம் வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க இதுகாறும் உழைத்தீர். அவற்றைக் காத்தருளத் திருமணம் ஏற்றருள வேண்டும்”** என விளம்பினர். மறைகள் வாழவும் உயர்ந்தோர் ஒழுக்கம் ஓங்கவும் நம் தொன்மையான பண்பாட்டைக் காக்கவும் சம்பந்தர் அவர்களின் வேண்டுகோளுக்கு, இசைந்தார்.

அதுகண்ட தந்தையாரும், மற்றை அடியார்களும் **“இது சிவபெருமானுடைய திருவருள்”** என்று உருகி மனமகிழ்ந்து, திருநல்லூரிலிருக்கின்ற பிராமணருள் நம்பாண்டார் நம்பி என்பவருடைய மகளே திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு **“மனைவியாதற்குத் தகுதியுடையவள்”** என்று எண்ணினார்கள். தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிராமணர்களோடும் திருத்தொண்டர்களோடும் விவாகம் பேசுதற்குத் திருநல்லூரை அடைந்து, அங்கு நின்று சுற்றத்தாரோடு வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய நம்பாண்டார் நம்பியோடு அவர் வீட்டை அடைந்தார்.

நம்பாண்டார் நம்பி சிவபாதவிருதயரையும் மற்றையோரையும் வரவேற்று **“நீங்கள் இங்கே எழுந்தருளி வந்தது என்ன”** என்று வினாவ, அவர்கள் நம்பாண்டார் நம்பியை நோக்கி, **“நாங்கள் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு உம்முடைய மகளை விவாகம் பேசி வந்தோம்”** என்று சொல்ல, நம்பாண்டார் நம்பி பெருங்களிப்புடையராகி, சிவபாதவிருதயரை நோக்கி **“சுவாமி! தேவரீருடைய பெருந்தவத்தினாலே திருவவதாரம் செய்தவரும், உலகத்தாயாகிய உமாதேவியாருடைய திருமுலைப்பாலை உண்டவருமாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு அடியேன் யானும் என் குலமும் உய்யும் பொருட்டு, என் குலக்கொழுந்தை விவாகஞ் செய்து கொடுத்தற்கு என்ன தவஞ் செய்தேனோ”** என்றார். அதுகேட்ட சிவபாதவிருதயர் மற்றவர்களோடு மகிழ்ச்சியுடன் சீர்காழிக்கு மீண்டு சென்று, பிள்ளையாருக்கு அதனைத் தெரிவித்து, திருமண ஏற்படுகள் ஒழுங்கமைத்தனர்.

திருமணத்தன்று, காலையில் சம்பந்தர் சீகாழித் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டார். பின்னர் தம் தந்தையும், உறவினரும், அடியார்களும் புடைசூழ சம்பந்தர் நல்லூருக்குச் சென்று சேர்ந்தார். பெண்வீட்டார் அவர்களை நன்முறையில் வரவேற்றனர். சம்பந்தர் திருமண மண்டபத்திற்குச் சென்று அமர்ந்தார். நம்பாண்டார் முதலியோர் மணப்பெண்ணை அவரருகே அமரச் செய்தனர்.

திருநீலநக்க நாயனார் திருமணச் சடங்குகளைச் செய்தார். சம்பந்தர் மனைவியின் கையைப் பற்றிய வண்ணம் எழுந்து நல்லூர் கோயிலினுட் சென்றார். திருமணத்திற்கு வந்திருந்தோரும் அவரைத் தொடர்ந்து சென்றனர். திருக்கோயில் சன்னிதியில் நின்று அவர்,

**“கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.”** எனம் பதிகத்தைப் பாடினார்.

அப்பதிகத்தின் மூலம் தான் இறைவனுடன் சேர வேண்டும் எனும் தம் தணியாத தாகத்தை உணர்த்தினார்.

அப்போது ஓர் அசரீரி கேட்டது. **“நீயும் உன் மனைவி சொக்கியாரும் உன் திருமணத்திற்கு வந்துள்ளோரும் இங்கு எழும் சோதியின் வழியாக எம்மை வந்து அடையுங்கள்”** என்று இறைவன் அருளிச் செய்து, சோதிலிங்கமாக எழுந்து நின்றார். அப்பேரொளி கோயில் முழுதும் நிறைந்தது. சோதிலிங்கத்தின் முன் ஒரு வழியும் தோன்றியது. உளம் நெகிழ்ந்த சம்பந்தர்,

**காதல் ஆகிக் கசிந்து, கண்ணீர் மல்கி,
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம், நமச்சி வாயவே. - 1**

**நம்புவார் அவர் நாவின் நவிற்றினால்,
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. - 2**

**நெக்குள் ஆர்வம் மிகப்பெருகிந், நினைந்து
அக்கு மாலை கொடு அம்கையில் எண்ணுவார்,
தக்க வானவாரத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. - 3**

**இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்து, ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமம்தான் நினைவார்க்கு இனியான், நெற்றி
நயனன், நாமம் நமச்சி வாயவே. - 4**

**கொல்வாரேனும், குணம் பல நன்மைகள்
இல்லாரேனும், இயம்புவர் ஆயிடின்,
எல்லாம் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. - 5**

**மந்தரம் ஆன பாவங்கள் மேவிய
பந்தனை அவர் தாமும் பகர்வரேல்,
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்,
நந்தி நாமம் நமச்சி வாயவே - 6**

**நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்,
உரைசெய் வாயினர் ஆயின், உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்,
வரதன் நாமம் நமச்சி வாயவே - 7**

**இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல்
தலம்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி, வாய்மொழி செய்தவன் உய்வகை
நலம்கொள் நாமம் நமச்சி வாயவே. - 8**

**போதன், போது அன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரிது ஆகி, அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. - 9**

**கஞ்சி மண்டையார் கையில் உண் கையர்கள்,
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்,
விஞ்சை அண்டர்கள் வேண்ட, அமுது செய்
நஞ்சு உண் கண்டன் நமச்சி வாயவே. - 10**

**நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால், தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே. - 11**

என்ற ‘நமச்சிவாயத் திருப்பதிகத்தினைப்’ பாடியருளினார். **“சிவநெறியிற் சேர்க்க வல்லது திருவைந்தெழுத்தே”** என்பது அப்பதிகம் உணர்த்தும் உண்மை.

பிறவிக்கடலிலே கரைகாணாது அழுந்தி அறிவின்றி மயங்குகின்றவர்கள், பிள்ளையாருடைய திருமணத்தைச் காணப் பெற்றமையால், அந்தச் சோதியினுள்ளே புகுந்தார்கள். திருநீலநக்கநாயனார், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் தங்கள் மனைவியரோடும் சுற்றத்தாரோடும் புகுந்தார்கள். அனைவரையும் தொடர்ந்து, அனைத்து உயிர்களையும் உய்விக்கும்பொருட்டுத் திருவவதாரம் செய்தருளிய சைவ சித்தாந்த சமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக் கொண்டு அந்தச் சோதியை வலஞ்செய்து, அதனுள்ளே புகுந்து, சிவசோதியில் கலந்தார்.

திருச்சிற்றம்பலம்

**எம்பிரான் திருஞானசம்பந்தன் பாகம் முற்றும்**

திருச்சிற்றம்பலம்

மூலம் - திருஞானசம்பந்தர் வாழ்வியல் அற்புதங்கள்
- டாக்டர் சு. உமாமகேஸ்வரி

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அங்கயற்கண்ணி (மீனாட்சி) உடனுறை சொக்கநாதர் (சுந்தரேசுவரர்) திருக்கோயில் -திரு ஆலவாய் (கடம்பவனம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 192 ஆவது திருக்கோயில் - திரு ஆலவாய்)



**"ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே"**

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமொடு அமர்ந்து, இப்பசுந்தமிழை பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த, **'திரு ஆலவாய்'** என்று திருமுறைப் பதிகங்களில் சிறப்பிக்க விளங்குவது மதுரை. இத்திரு ஆலவாய் திருப்பதியிலேயே அங்கயற்கண்ணி உடனுறை சொக்கநாதப் பெருமான் திருக்கோயில் கொண்டு உறைகின்றார்.

**"பாண்டிநாடே பழம்பதி"** என்று சிறப்பித்து ஓதப்பெறும் மதுரை, பாண்டிநாட்டில் பாண்டிய மன்னர்களுக்குத் தலைநகராக விளங்குவது மதுரை. புலமைமிக்க புலவர் பெருமக்கள் பலர் இருந்து தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்ய நிலைக்களமானது. சங்கப்பனுவலாகிய பரிபாடலில், மதுரைக்கும் வையைக்கும் முப்பது பாடல்களைக் காணலாம்.

இங்குச் சிவபெருமான் செய்தருளிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப்போல வேறு எங்கும் நிகழ்ந்திலது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களுடைய பதினொரு பதிகங்களைக் கொண்டது.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அனல்வாதம் புனல் வாதம் செய்து சைவத்தைப் பாண்டிநாட்டில் நிலை பெறச்செய்த பதி. முத்திதரும் தலங்களில் ஒன்றாய் விளங்குவது. ஐந்து சபைகளுள் வெள்ளியம் பலத்தைக் கொண்டது. மூர்த்தி நாயனார் தோன்றிய திருப்பதி. மாணிக்கவாசகரது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு அறிவுறுத்தி அவனை உய்விக்கச் செய்வதற்காக, நரி பரி ஆக்கியது, பரி நரியாக்கியது முதலான திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம்.

**1. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்:** இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும், பழைய திருவிளையாடல் எனவும் வழங்கப்பெறும். இது ஆராய்ச்சிக்குச் சிறந்த நூல். இதை ஆக்கியோர் செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியாவர்.

**2. கடம்பவன புராணம்:** இது தொண்டைநாட்டிலுள்ள




இலம்பூரிலிருந்த வீமநாத பண்டிதரால் இயற்றப்பெற்றது.

**3. சுந்தரபாண்டியம்:** இது தொண்டைநாட்டிலுள்ள வாயிற் பதியிலிருந்த அனதாரியப்பரால் எழுதப்பெற்றது.

**4. திருவிளையாடற் புராணம்:** இது திருமறைக்காட்டிலிருந்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பெற்றது. இது சமய வளர்ச்சிக்கும் தமிழ்வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவது. இது தோன்றிய பின்னர், இத்தலத்திற்குரிய வேறு புராணங்களை மக்கள் விரும்பிப் படிக்காததே இதன் பெருமையை உணர்த்துவதாகும். சங்கநூல் அறிவுசான்ற திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இதற்குச் சிறந்த உரையெழுதியுள்ளார்கள்.

**5. திருவிளையாடல் போற்றிக்கலி வெண்பா, 6. மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி:** இவ்விரு நூல்களும் மேற்குறித்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பெற்றனவாகும்.

**7. மதுரைக் கலம்பகம், 8. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்:** இவ்விரு நூல்களும் குமரகுருபர அடிகளாரால் இயற்றியருளப் பெற்றன. இவைகளன்றி மதுரைக் கோவை, மதுரைச் சொக்கநாதர் உலா, தமிழ்விடுதூது முதலிய பல பிரபந்தங்களும் இறையனார் அருளிய களவியலும் (அகப்பொருள் இலக்கணம்) இத்தலத்தின் சிறப்பிற்கு உரியன.

**அமைவிடம்: மதுரை மாவட்டம், தமிழ்நாடு**

மதுரை தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 3/4. கி.மீ. தூரத்தில், வையையாற்றின் தென்கரையில் இருக்கிறது. தமிழகத்துப் பெருநகர்கள் பலவற்றிலிருந்தும் பேருந்துகளில் மதுரை செல்லலாம். பாண்டியநாட்டுத்தேவாரம் பெற்ற தலங்கள் பதினான்கில் முதன்மை பெற்றது.



**இறைவர் திருப்பெயர்:** சுந்தரேசுவரர்,சோமசுந்தரர், சொக்கலிங்கநாதர், சொக்கேசர், ஆலவாய் அண்ணல், சொக்கநாதர்.

**இறைவியார் திருப்பெயர்:** மீனாட்சி, அங்கயற்கண்ணி, தடாதகை பிராட்டி, பச்சைதேவி, மரகதவல்லி, தடாதகை, அபிசேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி, கற்பூரவல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப் பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்க வல்லி, மும்முலைத்திருவழுதி மகள்.

**கோயில் மரம்:** கடம்ப மரம்.

**தீர்த்தம்:** பொற்றாமரைக்குளம், வைகை ஆறு, கிருதமாலை, தெப்பக்குளம், புறத்தொட்டி.

**வழிபட்டோர்:** சம்பந்தர், அப்பர், சுந்தரர், நக்கீரதேவ நாயனார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், இந்திரன் முதலியோர்.

**பாமாலை:** சம்பந்தர், அப்பர், நக்கீரதேவ நாயனார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார்.

### நாயன்மார்களால் பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் பாடியத் திருப்பதிகம் (09 பதிகங்கள்)

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லிய சமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே
பாதி மாது உடனாய பரமனே
ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே - (3-108)

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய்யெனைப்
பொய்யரா மமணர் கொளுவுஞ் சுடர்



பையவே சென்று பாண்டியற்காகவே - (3 -51)

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமைபங்கன் திரு ஆலவாயான் திருநீறே
- (2-66)

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே -
(3-120)

மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந்தேவிகேள்
பானல் வாயொரு பாலன் ஈங்கு இவன் என்று நீ பரிவு எய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியேன் அல்லேன் திருவாலவாயரன் நிற்கவே - (3-39)

### திருநாவுக்கரசர் பாடியத் திருப்பதிகம் (02 பதிகங்கள்)

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ் வெண்திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகி மா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவல் உமையோடு ஆடித்
திளைத்தானைத் தென்கூடல் திரு ஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே - (6-10)

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணா வென்றென்
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கி நின்கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள் செய்யாயே - (4-62)

### சேக்கிழார் பெருமான் மூர்த்தி நாயனார் புராணத்தில் குறிப்பிட்டது

மும்மைப் புவனங்களின் மிக்கது அன்றே அம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ் நூலின் விளங்கு வாய்மை
செம்மைப் பொருளுந் தருவார் திருஆலவாயில்
எம்மைப் பவந் தீர்ப்பவர் சங்கம் இருந்தது என்றால்
- (12.021 - 7)

வந்துற்ற பெரும் படை மண் புதையப் பரப்பிச்
சந்தப் பொதியில் தமிழ் நாடு உடை மன்னன் வீரம்
சிந்தச் செரு வென்று தன் ஆணை செலுத்தும் ஆற்றால்
கந்தப் பொழில் சூழ் மதுரா புரி காவல் கொண்டான்.
(12.021 - 12)

செக்கர்ச் சடையார் விடையார் திரு ஆல வாயுள்
முக்கட் பரனார் திருத் தொண்டரை மூர்த்தியாரை
மைக்கற்புரை நெஞ்சுடை வஞ்சகன் வெஞ்ச மண் பேர்
எக்கர்க்குடனாக இகழ்ந்தன செய்ய எண்ணி. (12.021 - 15)

மேலும் சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்(12.21.402 ரூ 406), திருஞானசம்பந்தர் நாயனார் புராணம் (12.28.647, 661, 662, 663, 664, 665, 675, 704, 706, 740, 764, 861, 863, 865, 867, 872, 876, 903 ரூ 947), கழறிற்றறிவார் நாயனார் புராணம் (12.37.82,91,92 ரூ 93), திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் (12.69.1,2 ரூ 3) போன்றவற்றிலும் திரு ஆலவாய் திருத்தலம் பற்றி போற்றிப் பரவி சென்றுள்ளார்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## நாவலர் கீரிமலைச் சிவன்கோயில் எனக்குறிப்பிட்ட கீரிமலை நகுலேச்சரம்



இலங்கையிலுள்ள புராதன சிவ ஈச்சரங்களுள் யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில் என்ற பெருமையும், பழமையும் கொண்டதும், மூர்த்தி, தல தீர்த்தச் சிறப்பாலும், தலயாத்திரைக்கும், பிதிர்கடன் புரிவதற்கும் பிரசித்தி பெற்ற புண்ணிய சிவ ஆலயமாக இக்கோயில் மிகப் பழங்காலத் திலிருந்து விளங்கி வருகின்றது. இத்தலம் ஈழமணித் திருநாட்டின் வடக்கில் கீரிமலை என்னும் ஊரில் அமைந்துள்ளது. அதனால் கீரிமலைச் சிவன் கோயில் என்று அவ்வூரார் கூறுகின்றனர். ஆரம்ப காலச் சிவன் கோயில் கீரிமலையின் மேல் அமைந்துள்ளதாகக் கூறுகின்றனர். அம்மலையை **'நகுலகிரி'** என்றும் அழைத்துள்ளனர். அங்கு நகுல முனிவர் இம் மலையில் தவம் செய்து தனது கீரிமுகம் சிவன் அருளால் மாறப்பெற்றமையால் இம் மலைக்கு நகுல மலை என்றும் இங்கு நகுலேச்சரராக சிவன் அமர்ந்து அருளாட்சி புரிவதனால் நகுலேச்சரம் என்ற பெயர் பெற்றதாகவும் கூறுவர். புராதன காலத்தில் இக் கோயில் திருத்தம்பலேச்சரம் என்ற பெயராலும் அழைக்கப்பட்டு வந்ததுள்ளது. இங்கு நகுலேச்சரருடன் இறைவியாக நகுலாம்பிகையும் அருள் புரிந்து வருகின்றாள். இங்குள்ள தீர்த்தம் மிகவும் பிரசித்தம் வாய்ந்தது. இத் தீர்த்தத்தினை கீரிமலைத் தீர்த்தம், சாகர சங்கம தீர்த்தம், கண்டகி தீர்த்தம், கங்கா சமுத்திர சங்கமம் எனப் பல பெயர்களாலும் போற்றுகின்றனர்.

### திருத்தல வரலாறு

நகுலேச்சரத்தின் சில நம்பிக்கைகளும், வரலாற்றுத் தகவல்களும் யாழ்ப்பாணத்து வைபவ மாலை, கைலாச புராணம், நாவலரால் கையெழுத்துப் பிரதியாக எழுதப்பட்ட **"கீரிமலைச் சிவன் கோயில்"** என்னும் பத்திரிகை என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நகுலேச்சரத்தின் மிக ஆதியான முதற் கோயில் கடல் கோளினால் மூழ்கி விட்டதாகவும், இரண்டாவது கோயில் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டதாகவும், மூன்றாவது கோயில் ஈழப்போரில் சிதைவடைந்து தற்போது ஆகமவிதிப்படி கருவறை, பெரு மண்டபங்கள், கோபுரம், சுற்றுத் தெய்வக்கோயில்கள், மடங்கள் என்பன அமைக் கப்பட்டு குடமுழுக்கும் கண்டுள்ளது.

யாழ்ப்பாண வைபவ மாலையில் **"அரசாட்சியை ஆரம் பிக்க முன்னமே விஜயராசன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நான்கு திக்கிலும் நான்கு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான். அதில் வடக்குத் திசைக்குக் கீரிமலைச் சார லில் திருத்தம்பலை எனும் பகுதி யிலே திருத்தம்பலேசுவரன், திருத் தம்பலேசுவரி கோயில்களையும், அதற்கு அண்மையில் கதிரை யாண்டவர் கோயிலையும் கட்டுவித்து அவ் ஆலயங்களிற்குப் பூசை நடத்தும் படி, நீலகண்டாசாரியனின் மூன்றாம் குமரன் வாமதேவாசாரி யார் என்னும் காசியிற் பிராமண னையும் அழைப்பித்து அக்கிரகார வசதிகளையும் கொடுத்து இருந் தான்"** என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

கீரிமலையின் தலச்சிறப்பை கைலாச புராணம் குறிப்பிடும் போது, இராவணனின் யாழோசையினாலே பெரிதும் கவரப்பெற்ற சுசங்கீதன் எனும் கந்தருவன் இராவணனின் யாழினை கவர்ந்து கொள்வதற்குத் தருணம் பார்த்திருந்தான். இராவணன் இராம பாணம் தாக்கிய போது அவனின் கையிலிருந்த யாழ் நழுவி விழ அதனை சுசங்கீதன் பற்றிக் கொண்டான். அவன் கீரிமலையிலே யாழ் வாசியினைப் புரிந்து பரமேவசுவரனைத் தொழுதான். அதன் பயனாக பரமேசுவரனும், பரமேசுவரியும் உடனுறையாகக் காட்சி கொடுத்து, **"காடுகொன்று நாடாக்கி நகரமைத்து, அதனை வீணாபணம் என்னும் பெயரோடு ஆட்சி புரிவாய்"** என்று திருவாய் மலர்ந்தருளினார்கள் என்ற நம்பிக்கைகளும் இத் தலச்சிறப்பபை உணர்த்துவதாய் உள்ளது.

நகுலேச்சரத்தின் உற்பத்தி பற்றிக் கூறுகையில் நகுல முனிவரின் கதை சிறப்பு வாய்ந்தது இக் கதைபற்றி மயில் வாகனப்புலவர் கீழ்வருமாறு கூறுகின்றார்.

**"நகுலமுனி என்னும் முனிவர் அங்குள்ள மலைச்சாரலிலே சில காலம் தங்கியிருந்து, தீர்த்தமாடி வந்த பொழுது தன் முகத்திற்கு இருந்த அங்கவீனம் நீங்கிப்போனது கண்டு, அத்தல அற்புதத்தையும் தீர்த்த மகிமையையும் குறித்து வியப்புற்று அவ்விடமே தமக்கு தவம் செய்வதற்குரிய இடம் என்று அங்கே எழுந்தருளி தன் கீரிமுகம் (நகுலம்) நீங்கினார். இதனால் அம்மலைக்கு கீரிமலை என்றும், அவர்பெயரால் நகுலேச்சரம் என்றும் பெயர் வரலாயிற்று."**

கீரிமலை சிவன்கோயில் சிறப்பபை உணர்த்தும் மற்றுமொரு கதை மாருதப்புரவல்லியுடன் தொடர்பானது. இக்கதையும் யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப் பட்டுள்ளது **"சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிர சோழன் மகள் மாருதப்புரவல்லி என்பவள் தனது குன்ம வியாதியை வைத்தியத்தினால் நீக்க முடியாமல் தீர்த்த யாத்திரை செய்யக் கிளம்பினாள். சாந்தலிங்கனெனும் ஒரு சந்நியாசி கண்டு, இலங்கையின் வட முனையிலே கீரிமலை என்றொரு மலையுண்டு அங்கு உவர்ச்சல மத்தியில் சுத்த தீர்த்தமும் மலையருவித் தீர்த்தமும் கலந்த அற்புதத் தீர்த்தம் உண்டு. அதில் தீர்த்தமாடி சில காலம் தங்கியிருந்து, சிவனை வழிபட்டால் சுகமடைவாய் எனக் கூறினார். இதைக் கேட்டு மாருதப்புரவல்லியும் அவளுடைய தோழிகளும் சேனைகளும் புறப்பட்டு கீரிமலையில் வந்திறங்கி, நகுலமுனிவரைக் கண்டு தொழுது, அவரிடம் ஆசி பெற்று, அவரின் கீரி முகம் மாறிய செய்தியையும் கேட்டு ஆனந்தமடைந்து, தீர்த்தமாடி சிவாலய வழிபாடு செய்து வந்த நாளில் அவளுக்கிருந்த குன்ம வலியும் தீர்ந்து குதிரைமுகமும் தானாக மாறிப் போயிற்று."**

மேற்படி கதைகளெல்லாம் ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் ஆகும். இலங்கையில் யாழ்ப்பாணத்துச் சைவர்களிடையே ஒல்லாந்தரின் ஆதிக்கம் நிலை பெற்ற காலத்தில் மிகப் பிரதானமானதும், புராதனமானதுமான சைவத் திருக்கோயி லாக நகுலேச்சரம் விளங்கியுள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது. இதேபோல் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலும் இக் கோயில் அரசர்களின் ஆதரவிற்கும் பற்றிற்கும் உரியதாக விளங்கியிருக்கின்றது. சிங்கையாரிய மகாராசனும் புவனேக பாகு மந்திரியும் கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடி சிவாலய வழிபாடும் செய்து, தங்களுக்கு இறைகடமையாகவும், வருமானமாகக் கிடைத்த பணத்தின் ஒரு பகுதியை ஆலய பரிபாலனத்திற்காகவும் செலவு செய்துள்ளனர். இதனைப் போர்த்துக்கேய ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றது. ஏறத்தாள 180 வருடங்களாக ஒல்லாந்தரின் ஆட்சியில் தடை செய்ப்பட்டிருந்த சைவசமயம், பிரித்தானியரின் ஆட்சியில் ஒரு சீரான நிலைக்கு வந்த போது, ஒல்லாந்தரால் அழிக்கப்பட்ட பல ஆலயங்கள் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் புனரமைக்கப்பட்டன. இந்த சூழ்நிலையில் அழிந்த கீரிமலைச் சிவன் கோயிலை மீண்டும் மீட்டெடுக்க நாவலர் பெருமான் அரும்பாடு பட்ட செய்தியை **"ஆறுமுக நாவலர் சரித்திரம்"** எழுதிய கைலாசப்பிள்ளை கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"யாழ்ப்பாணத்திற் கீரிமலையிலே ஒரு சிவாலயம் முற்காலத்திலிருந்து அழிந்து போயிற்று. அந்தத் தலத்திலே வேறொரு சிவாலயம் அமைக்க வேண்டும் என்று நினைத்து 'கீரிமலை சிவன் கோயில்' என்னும் பெயர் கொடுத்து ஒரு பத்திரிகை எழுதித் தமது கையெழுத்தோடு வெளிப்படுத்தி, அதற்காக அங்கேயே போய் இடமும் பார்த்து வகுத்து, அவ்விடயத்தில் முயற்சி செய்யும் படி பிராமண குருமாரைத் தூண்டி விட்டார். இப்போது அங்கே அமைக்கப்பட்டிருக்கும் கோயிலும் அதுவே, இடமும் அதுவே."** இத்தகவல் அடங்கிய கல்வெட்டுப் பொறிப்பு ஒன்று அவ் ஆலயத்தில் இன்றும் உண்டு.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு






### திருவிழாவும் வழிபாடும்

இத்திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழா மாசித் திங்களில் நடைபெற்று வருகின்றது. சிவனிரவு மறைமதியன்று தீர்த்தத் திருவிழா நிகழும். அம்மன் கோயிலில் பங்குனித் திங்களில் கொடியேறித்திருவிழா நடைபெறும். சித்திரை வருடப்பிறப்பன்று தேர்திருவிழா நடைபெறும். புரட்டாதிசனி நான்கு வாரமும் இங்கு விரத வழிபாடும், திருவிழாவும் நடைபெறும். திங்கள்தோறும் சோமவார விழாக்கள் அலங்காரத் திருவிழாவாக நிகழும். இவை தவிர ஒவ்வொரு திங்களிலும் வரும் விழாக்கள், விரதங்கள் என்பனவும் சிறப்பாக நடைபெறும்.

ஆறுகாலப் பூசைகள் தினமும் நடைபெறும். திருப்பள்ளியெழுச்சி முதல் நள்ளிரவுப் பூசை வரை சிறப்பாக நடைபெற்று வருவது போற்றுதலுக்குரியதாகும்.

யாழ்பாண சைவக் கோயில்கள் யாவும் புராணப்படன மரபிற்கு பெயர் பெற்றவை. இத்தலத்திலும் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியன படிக்கப்பட்டு வருகின்றன. இதே போல் நகுலாய புராணமும் கொடிமரத்திற்கு முன்பாக படிக்கப்படும். கந்த புராணம் முருகன் கோயில் முன்பாகவும், மார்கழித் திங்கள் பன்னிரண்டாம் பிறைத் (ஏகாதசி) திதியில் ஏகாதசி புராணமும் திருப்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும், திருவாதவூரடிகள் புராணமும் படிக்கப்படும். இக் கோயில் புராணம் படித்து பொருள் கூறும் மரபு சைவ ஆசார சீலர்களாய் விளங்கிய ஏரம்பையர், அப்பாசாமி ஐயர், வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை, வித்துவ சிரோமணி பொன்னம் பலபிள்ளை, த.கைலாயபிள்ளை போன்றோரால் நடத்திச் செல்லப்பட்ட பாரம்பரியம் மிக்க சைவக் கோயிலாகும்.

மற்றும் ஈழத்தில் இறந்தோர்க்கு வழிபாடும் கடனும் செய்யும் புண்ணிய தலமாகவும் விளங்குகின்றது.

### திருத்தலம் பற்றிய புராணங்களும் பத்திப் பாடல்களும்

நகுலேச்சரம் பற்றிய தல புராணங்களில் முதன்மையானது மாதகல் ஏரம்பையர் பாடிய நகுலாசல புராணம் சிறப்பு வாய்ந்தது. நீர்வேலிப் பண்டிதர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் சமஸ்கிருத மொழியில் நகுலேஸ்வர மான்மியம் எனும் நூலைப் பாடியுள்ளார். இதனை அ. குமாரசாமி புலவர் தமிழில் மொழிபெயர்த்தும் உள்ளார். அராலியைச் சேர்ந்த விசுவநாத சாத்திரியார் பாடிய நகுலமலைக்குறவஞ்சி, குமார சுவாமிப் புலவரால் பாடப் பெற்ற நகுலேஸ்வர ஊஞ்சல், பண்டிதர் இ. நமசிவாயம் பாடிய நகுலேசுவரர் விநோத விசித்திர கவிப் பூங்கொத்து என்பன நகுலேசுவரப் பெருமானின் அருளாற்றலையும் அற்புதங்களையும், அடியார்களின் பத்தி மாண்புகளையும் எடுத்துக் கூறும் பத்திப் பாடல்களாகும்.

**பகுதியுந் தகுதியும் பாலுணர்த்திடும்**
**விகுதியும் பெற்றிடை விளங்கி ரட்டியால்**
**நகுலனைப் பணிபவர் நண்ணு மீறதாம்**
**புகுமுதல் பெற்றபடி பொருந்தி வாழ்வதே**
- (நகுலாசல புராணப்பாடல்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



(17-01-2023) - முழுங்காவில் ஓங்காரநாதர் திருக்குடமுழுக்கு



(15-01-2023) - தென்னாட்டில் தைப் பொங்கல் வழிபாடு



(29-01-2023) - முழுங்காவில் ஓங்காரநாதர் சங்குநீராட்டு



(19-01-2023) - தைத் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடும், இதழ் வெளியீடும்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து ஒன்பதாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு சுறவம் நல்லோரை தைத் திங்கள் 22ம் நாள் நிறைமதி கூடிய தைப்பூசம் அன்று (05-02-2023 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.
தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org